விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறை படிப்பகம்

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | மாசி 11 ஞாயிற்றுக்கிழமை (23.02.2003) | தொலைபேசி~ 2223378 | ஒலி 66

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

### அடுத்த பேச்சுக்களில் சமஷ்டி குறித்து ஆராயப்படும்

# சமாதான காலத்தில் புலிகள் தம்மை பலப்படுத்தவில்லை

## நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் பிரதமர்



(நமது நிருபர்)

**"கடந்த இருபது வருட காலமாக இலங்கையில் இடம்பெற்று வந்த இன மோதல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து சமாதான பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வரும் காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் பலம் வாய்ந்தவர்களாக மாறியுள்ளனர் என்ற எதிரணியினரின் குற்றச்சாட்டுக்களை நான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டேன" என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அழுத்த திருத்தமாக கூறியுள்ளார்.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றிரவு தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்;

கடந்த பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில், விடுதலைப்புலிகள் அரசுடன் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தமையால் அதன் மூலமே விடுதலைப்புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொண்டார்கள். புலிகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஜனாதிபதி சமாதானத்தை முன்னெடுத்ததால் அம்முயற்சி தோல்வி கண்டது.

நோர்வேயின் அனுசரணையுடன் தாய்லாந்து, ஒஸ்லோ ஆகிய இடங்களில் நடைபெற்ற 5 சுற்று சமாதான பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் புலிகள் தம்மை பலப்படுத்திக் கொண்டார்கள் என்று எதிரணியினர் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசுப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதி

(2ம் பக்கம் பார்க்க)

அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு

## இரு தரப்பிலும் நம்பிக்கையீனம் சமாதானம் நிலைப்பது கடினம

### கண்காணிப்புக் குழுவின் தலைவர்

(யாழ்ப்பாணம்)

போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை சரிவர நிறைவேற்றி சமாதானத்தை அடைய வேண்டுமானால் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் விட்டுக்கொடுப்புடனும் மனிதாபிமானத்துடனும் நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு யாழ்மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஒலோ புரொண்டம் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் இடம்பெறும் யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை மீறல்கள் குறித்து யாழ் மாவட்ட பொது அமைப்புக்கள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர். இம் மகஜரை பெற்றுக் கொள்ளும் நிகழ்விலேயே ஒலோ புரொண்டம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(2ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் வருகை

(கொழும்பு)

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் விட்ஜே டெல்சன் நேற்று கொழும்பு வந்து சேர்ந்துள்ளார்.


தற்போது பதவியிலுள்ள ரொண்ட் பியூறு ஹெவ்டேயின் பதவிக் காலம் அடுத்தமாதம் மூன்றாம் திகதியுடன் முடிவடைய இருப்பதால் புதிய தலைவர் விட்ஜே டெல்சன் அடுத்தமாதம் 3ம் திகதி பதவி ஏற்கவுள்ளார்.(வ)

## யாழ்குடாநாடு நேற்று முற்றாக ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஓராண்டு நிறைவடையும் வேளையிலும் தமிழ மக்களின் இயல்பு வாழ்க்கை இதுவரை சீரமைக்கப்படவில்லை என்பதைக் கண்டித்து அதற்கு அதிருப்தியை வெளியிடும் வகையில் முற்பகல் 10 மணிவரை

(2ம் பக்கம் பார்க்க)



ஸ்தம்பிதப் போராட்ட முடிவில் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத் தலைவரிடம் மனித நேய அமைப்புக்கள் ஒன்றியம் நிலைப்பாட்டை விளக்கி மகஜர் கையளிக்கப்பட்ட காட்சி படம் : க.பவன்

## சமாதான முயற்சியில் பிரதமரின் அர்ப்பணிப்பு மகிழ்வுக்குரியது

### சு.ப.தமிழ்ச்செல்வன் பாராட்டு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முன்னெடுப்புக்களில பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அர்ப்பணிப்புக்கள் மகிழ்ச்சிக்குரியது. எனினும் இத்தகைய அர்ப்பணிப்புக்கள் மேலும் மேலும் தேவைப்படுகின்றன.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். புரிந்துணர்வு உடன் படிக்கையின் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு தனியார் தொலைக் காட்சி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து

(2ம் பக்கம் பார்க்க...)

## கூட்டமைப்பு-புலிகள் இன்று கிளிநொச்சியில் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழர் தேசிய கூட்டமைப்பின் எம்.பிக்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனிற்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இன்று கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறை நடுவப் பணியகத்தில் நடைபெறவுள்ளது.

இச் சந்திப்பில் சமஷ்டி அமைப்பு குறித்து அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளும் உத்தியோக பூர்வமான பேச்சு வார்த்தையில் ஈடுபடும போது அப் பேச்சு வார்த்தையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என கூட்டமைப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகளின்

(2ம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுக் கடலில் மீனவர்கள் கடுமையாக தாக்கப்பட்டனர்!

### டோறாவில் வந்த கடற்படை அட்டகாசம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்கள் ஏழு பேர், கடற்படையினரால் நேற்று கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர்.

காலை 7.30 மணியளவில் நெடுந்தீவு மேற்கிலிருந்து மூன்று படகுகளில் கடற்தொழிலுக்கு சென்ற பிரஸ்தாப மீனவர்கள் ஏழுபேரும் கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது மூன்று டோறாப் படகுகளில் வந்து வழிமறித்த கடற்படையினர் தம்மை றீப்பைக் கட்டைகளால் தாக்கியதாகவும், கடலுக்குள் தூக்கி வீசிவிட்டு ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்ததாகவும் மீனவர் சங்கத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கரையிலிருந்து அரைமைல் தொலைவில் இச் சம்பவம் இடம்பெற்றதால் பொதுமக்கள் பலர் இதனை நேரில் கண்டுள்ளனர்.

இச் சம்பவம் குறித்து வன்மையான கண்டனம் தெரிவித்த சங்கத் தலைவர் ப.அமிர்தநாதன் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்

(2ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சந்திரராசாவின் மறைவு கலைத்துறைக்கு பேரிழப்பு

## பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

தன்னலம் கருதாது மக்கள் தொண்டே மகேசன் தொண்டென வாழ்ந்த முன்னாள் பிரதேச செயலர் கா.சந்திரராஜா அவர்களின் திடீர் மறைவு தமிழினத்திற்குப் பேரிழப்பாகும்.

இவ்வாறு சந்திரராஜாவின் மறைவு குறித்து பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளர் கலாபூசணம் மெற்றாஸ்மயில் விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். அச்செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் சேவையில் ''சிவப்பு நாடா"வுக்கு இடங்கொடாத சிறந்த நிர்வாகியாகச் செயற்பட்டவர். கலைப் பரம்பரையில் உதித்த அவர் கலை, கலாசார அம்சங்களைப் பேணுவதில் பெருமுனைப்புடன் செயற்பட்டவர். அவரின இழப்பு நாட்டிற்கும் கலைத்துறைக்கும் பேரிழப்பாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ந)

# சுவீடன் உதவியுடன் யாழில் தொழில் பயிற்சிக் கல்வி

(யாழ்ப்பாணம்)

சுவீடன் தூதரகமானது வர்த்தக தொழில்துறை மன்றத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் தொழிற பயிற்சிக்கல்வியை போதிக்கவுள்ளது.

கைத்தொழில்சார் அலுவலர்களுக்கான இப்பயிற்சி இம்மாதம் ஆரம்பமாகி 6 வருடங்கள் இடம்பெறவுள்ளது.வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கும இப்பயிற்சிநெறி காலக்கிரமத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கென சுவீடன் அரசாங்கம் பெருமளவு பணத்தை ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் இலங்கைக்கான சுவடன் தூதரக பிரதிநிதி ஆனமோர் பிரானியஸ் அண்மையில் யாழ்ப்பாணத்தில நடத்திய பத்திரிகையாளா சந்திப்பில் தெரிவித்தார். (உ-4)

### சமாதான முயற்சி...

கொள்ளப்பட்டதினால் ஒரு வருட காலப்பகுதி உயிரிழப்புக்கள், யுத்த அழிவுகள் ஏதுமின்றி கழிந்திருக்கின்றன. ஆனால் புரிந்துணர்வு உடன்படிக்கையினால் தமிழ் மக்கள் சந்தோசப்படுமளவுக்கு ஏதும் நடக்கவில்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி 160 நாட்களுக்குள் இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்பட வேண்டும். ஆனால் ஒரு வருடம் கடந்த நிலையிலும் தமிழ்மக்கள் தமது சொந்த இடங்களில் குடியிருக்க முடியவில்லை. உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் குடாநாட்டில் 30வீதமான நிலப்பகுதியிலிருந்த இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடத்தில் குடியிருக்க முடியவில்லை. அது எமக்கு கவலை அளிக்கிறது என்றும் கூறினார். (த)

### யாழ்.குடா...

இடம் பெற்ற கதவடைப்புப் போராட்டத்தினால் குடாநாட்டுச் செயற்பாடுகள் அனைத்தும் முற்று முழுதாக ஸ்தம்பித்தது.

யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப் போராட்டத்தினால் முற்பகல் 10 மணிவரை அரச, தனியார் கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன

தனியார் கல்வி நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை நிறுத்தியிருந்தன. அரச தனியார் போக்குவரத்துக்கள் மற்றும் ஆட்டோ சேவைகள் எதுவும் இடம்பெறவில்லை

இதேவேளை வெளியிடங்களுக்கு பயணம் செய்வதற்காக பெருமளவான பயணிகள் யாழ் பஸ் நிலையத்தில் காத்து நின்றதையும் அவதானிக்க முடிந்தது. (இ-4,7)


நீர்வேலி
அருள்மிகு செல்லக்கதிர்காமசுவாமி கோவில்
ஆன்மீக நூலகத் திறப்பு விழாவும்
நீர்வேலியில் வெளிவந்த நூல்களின் கண்காட்சியும்

காலம் :23-02-2003 ஞாயிற்றுக்கிழமை
(சித்திரபானு வருடம் மாசி மாத விசாக நட்சத்திர தினம)
நேரம்: மு. ப. 11-30 மணி
தலைவர்: திரு.இ.குணநாதன
(அதிபர் - அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி)

நிகழ்ச்சி நிரல்

வேத பாராயணம்:
தேவார பாராயணம்:
நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப்பாடசாலை மாணவர்கள்
ஆசியுரை: சிவஸ்ரீ சாம்பசதாசிவ. சோமதேவக்குருக்கள்
(நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் தேவஸ்தானம் )
வரவேற்புரை: திரு. ச. லலீசன்
(ஆசிரியர்,சோமாஸ்கந்தக்கல்லூரி புத்தூர்)
தலைமையுரை :
நூலகம் திறந்து வைத்தல் : சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம
(உதவிப்பணிப்பாளர் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு)
வாழ்த்துரை : கவிஞர் கலாநிதி இ.முருகையன்
(முன்னாள் பதிவாளார்,யாழ்.பல்கலைக்கழகம்)
அமைப்பாளர் உரை: சிவஸ்ரீ கு.தியாகராசக்குருக்கள்
(நீர்வை மணி)
நன்றியுரை : பிரம்மஸ்ரீ க.நிரஞ்சனசர்மா (ஆசிரியர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

விழாக்குழு
செல்லக்கதிர்காம தேவஸ்தானம் நீர்வேலி.
(C/5794)



வாழ்த்துகின்றோம்

இன்று அகவை 60 காணும் நீர்வை மணி குமார தியாகராஜக் குருக்கள பல்வகைச் சிறப்புக்களும் பெற்று மனைவி மக்களுடன் பல்லாண்டு காலம் வாழ காமாட்சி அம்பாளின் பேரருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

இந்து பரிபாலன சபை,
காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்,
நீர் வேலி.


# கொக்குவில் இந்துவில் இன்று ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரி உயர்தர மாணவர்களின் ஒன்று கூடல் இன்று காலை கல்லூரி மண்டபத்தில் உயர்தர மாணவர் மன்றத் தலைவர் இ.நந்தகுமார் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் இளைப்பாறிய ஆசிரியர் இ.மா. சிவசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.வாழ்ததுரையை கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் நிகழ்த்துவார். (ந)

# கிரிக்கெற் அணி பொலநறுவைக்கு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய கிரிக்கெற் அணியினர் பொலநறுவை கிங்கிராங்கொட அலெக்சாண்டர் கிரிக்கெற் அணியின் அழைப்பின் பேரில் பொலநறுவைக்கு சென்றுள்ளனர். அங்கு மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட சிநேகபூர்வ ஆட்டமொன்றில் பங்குபற்றவுள்ளனர் (த)

# துப்புரவுப்பணி இல்லை

(தனங்கிளப்பு)

யாழ் மாநகர சபை எல்லைகுட்பட்ட கொக்குவில் கோணவளை வீதியின்ஒரு பகுதியில் மாநகரசபை ஊழியர்கள் துப்புரவுப் பணிகளை மேற்கொள்வதில்லை என புகார தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதியில் குப்பை கூழங்கள் தேங்குவதால் துர நாற்றம் வீசுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-37)

# ஒப்பந்த ஓராண்டு பூர்த்தியை ஒட்டி இன்று நல்லூர் ஆலய வீதியில் அடையாள உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் . மாவட்ட சமாதான நீதிவான்கள் பொது அமைப்புக்களும் ஒன்றிணைந்து இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரையும் நல்லூர் வடக்கு வீதியில அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் - இலங்கை அரசுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையினை இலங்கைப் படையினர் பல தடவை மீறியுள்ளமையினைக் கண்டித்தும், புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒருவருடம் பூர்த்தியடையும் வேளையில உடன்படிக்கையில் கூறப்பட்ட அம்சங்கள முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமையாலும் மக்கள் அதன் பலாபலன்களைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதை வலியுறுத்தியும்,

சமாதானம் நீடித்து நிலைக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரியும் நடைபெறவுள்ள இப்போராட்டத்துக்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து சமாதான நீதிவான் களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கத் தலைவர் க.நாகராசா கேட்டுள்ளார் (உ-7)

# காரைப் பாடசாலைக்கு அண்மையிலுள்ள வெற்றுக்காணிகளில் மிதி வெடிகள்

(காரைநகர்)

காரைநகர் இந்துக்கல்லூரிக்கு அண்மையில் உள்ள காணிகளில் மிதிவெடிகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிதிவெடி அகற்றும் பிரிவினரின் பரிசோதனையின்படி அப்பிரதேச காணிகளில் மிதிவெடி அபாயம் அறியப்பட்டதை எச்சரிக்கைப் பலகைகளும் இடப்பட்டுள்ளன.

மேற்படி பிரதேசத்தில் 1990 ஆம் ஆண்டு படையினரால் விடுவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இரு கால்நடைகள் இப்பிரதேசத்தில் மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்துள்ளதாகவும் அத்துடன் பாடசாலை எல்லைப் பிரதேசம் என்பதால் மாணவர்களின் நலன் கருதி மிதிவெடி அகற்றும் நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசத்திற்கு அண்மையில் கடற்படையினரின் முகாம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-246)

### சமாதான...

களுக்குமிடையே இடம்பெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தைமுன்னேற்றகரமாகவே செல்கிறது. அதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.சமாதான முயற்சியை அரசு தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் உறுதியாகவுள்ளது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் அமுலில் இருந்த வேளை இந்திய அமைதிப்படை விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் முல்லைத்தீவு வரைக்கும் சென்று திரும்பியது. யுத்த காலத்தில் விடுதலைப்புலிகள் பலம் வாய்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள் .பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் யுத்தம் மக்கள் மீது திணிக்கப்பட்டது. எந்தப்பிரச்சினையையும் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்க முடியுமே தவிர யுத்தத்தின் மூலம் தீர்க்க முடியாது என்பதை அரசின் தற்போதைய யுத்தநிறுத்த ஒப்பந்தமும்,சமாதானப் பேச்சுவார்த்தையும் எடுத்துக்காட்டுகிறது.

அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை பூர்த்தியான ஒருவருடகாலத்தில் பல முட்டுக்கட்டைகள், இடையூறுகள் ஏற்பட்ட போதும் அவற்றையெல்லாம் அரசுப பிரதிநிதிகளும், விடுதலைப்புலிகளின பிரதிநிதிகளும் பலதடவைகள் சந்தித்துப் பேசி அவற்றுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கும்,அதியுயர் பாதுகாப்பு வலய பிரதேசங்களில் இருந்து இராணுவத்தினரை அகற்றுவது தொடர்பாகவும்,சமஷ்டி அரசியல் மூலமான அதிகாரப் பகிர்வு குறித்தும் இனிவரும் பேச்சுக்களில் கவனம் செலுத்தப் படவுள்ளது.

அதியுயர் பாதுகாப்புவலயம் தொடர்பாகவும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கொழும்பு வந்து வடக்குக் கிழக்கிற்கு நேரடிவிஜயம் செய்து பாதுகாப்பு வலயப்பிரதேசங்களை பார்வையிட்டுச் சென்றுள்ள முன்னாள் இந்திய இரா்ணுவத் தளபதி லெப்டினனட் சதீஸ் நம்பியாரின் அறிக்கை அரசுக்கு கிடைத்தவுடன் அது தொடாபான முடிவுகளை அரசு எடுக்கும்

அரசும் விடுதலைப்புலிகளும் மேற்கொண்டு வரும்சமாதான முயற்சிகள் முன்னேற்றகரமான முறையில் எடுத்துச் செல்லப் படுவதால் இலங்கைக்கு உதவி வழங்குவதற்கு பல நாடுகள்முன் வந்துள்ளன. இந்த நிதியுதவிகள் மூலம் யுத்தத்தினால் அழிந்து போன வடக்கு கிழக்குப்பகுதிகள் மீண்டும் கட்டி எழுப்பப்படும் யுத்தமற்ற சூழ்நிலையில் தான் நாட்டில் பொருளாதரத்தை கட்டியெழுப்ப முடியும்.அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றி ணைந்து அரசின் சமாதான முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க நாட்டு மக்களுக்கான தனது உரையின் போது வலிறுத்திக் கேட்டுக்கொண்டார்(ம)

# கண்காணிப்புக் குழுவிடம் நேற்று மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம் )

யாழ்குடாநாட்டில் இடம்பெறும் யுத்தநிறுத்த மீறல்கள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டித்தும் மக்களின் இயல்பு வாழ்க்கையை வலியுறுத்தியும் யாழ் மாவட்ட மனித நேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் யாழ் மாவட்ட போரா நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர் .

நேற்று முற்பகல் 11 மணியளவில் இம் மகஜர் கையளிப்பு இடம் பெற்றது.

இந் நிகழ்வில் யாழ்மாவட்ட மனித நேய அமைப்புக்களின் தலைவர் எஸ் .பரமநாதன் கியுடெக அமைப்பின் தலைவர் ஜெயக்குமார் அடிகளா, அருட் தந்தை பேனாட் மற்றும் இந்து குருமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.(இ,4,7)

### கூட்டமைப்பினர்...

அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனிடம் கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இன்றைய அரசியல் நிலைப்பாடு அரசியல் தீர்வில் சமஷ்டி குறித்த கலந்துரையாடல் மற்றும் மாவட்ட அபிவிருத்தி பற்றியும் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் கூட்டமைப்பினர் கலந்துரையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த ஒரு வருட காலத்தில் கூட்டமைப்பினர் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைமைகளைச் சந்திப்பது இது மூன்றாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

# ஆண்டு விழா

(கொழும்புத்துறை)

கோப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஆண்டு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று காலை 930 மணிக்கு சம்மேளனமுன்றலில் நடை பெறவுள்ளது.மேற்படி நிகழ்வில பிரதமவிருந்தினராக இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரனும சிறப்பு விருந்தினராக வலிகிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.யாழவன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ_51)

### நெடுந்தீவு...

ளதாகவும், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இத் தாக்குதலினால் 2பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவர் ஏழு வயதுச் சிறுவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-48)

### இரு தரப்பிலும்...

அவர் மேலும் தெரிவிக்கையில், சமாதானத்தை முன்னெடுப்பதற்கு விட்டுக் கொடுப்பும் மனிதாபிமானமும் அவசியமாக உள்ளபோதும் இரு தரப்பும் அவ்வாறு செயற்படுவார்கள் என்று நம்பமுடியவில்லை இதனால் சமாதானத்தையும் அமைதியையும் பேணுவது கடினமான ஓர் விடயமாக உள்ளது.

யுத்திறுத்த மீறல்களையும், புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப படுவதையும் நேரடியாக கண்காணிக்க எனக்கு அதிகாரமில்லை அத்துடன் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் அதிகாரம் விரிவு படுத்தப்படவில்லை.

மட்டுப்படுத்தப்பட்ட அளவு அதிகாரமே எனக்கு வழங்கப் பட்டுள்ளது. அதனால் உங்கள் கோரிக்கைகள் எல்லாவற்றையும் உடனடியாக என்னால் தீர்த்து வைக்க முடியாது.

யுத்தநிறுத்த மீறல்கள் குறித்து நாம் அவதானிப்பதையும் உங்களைப போல பலர் கூறும் முறைப்பாடுகளையும் எம் மேலதிகாரிகளிடம் நாம் கூறுவோம் அவர்கள் அரசிற்கு எடுத்துக கூறி நடவடிக்கை எடுப்பார்கள் என ஓலோ புரொண்டம் தெரிவித்தார். (இ-4)


சிறு விளம்பரம்

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி DIPLOMA IN ENGLISH, MEDICAL LABORATORY SCIENCE (LONDON)
426(302) K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.

பிளாக் வீதி, சங்கானை (6565)



A/L பௌதிகவியல்
இணைந்த கணிதம்

பல வருடம் அனுபவம் பெற்ற ஆசிரியர்களால் தாராளமான பயிற்சி களுடன் வினாத்தாள்கள் உட்பட மிகச சிறப்பாக கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். முழுப்பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் முடிக்கப்படும்.
சந்திப்பு- 3மணிக்கு பின்பு
ச. பாலசுப்பிரமணியம் B.sc(cey) Dip in Ed
17/1,பிறவுன் வீதி
யாழ்ப்பாணம்.




# உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

# CRICKET WORLD CUP 2003




## இலங்கை அணி வீரர்களுக்கு கொமாண்டோப் பாதுகாப்பு

### பாதுகாப்பே வேண்டாம் என்கிறார் ஜெயசூரியா

உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் நாளை கென்யாவுடனான போட்டியில் விளையாடுவதற்காக நைரோபி சென்றடைந்துள்ள இலங்கை கிரிக்கெற் வீரர்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 20ம் திகதி நைரோபி சர்வதேச விமான நிலையத்திற்கு சென்ற இலங்கை கிரிக்கெற் அணியினருக்கு கலகமடக்கும் பொலிசார் பாதுகாப்பு வழங்கினர். இலங்கை வீரர்கள் நைரோபி விமான நிலையத்திலிருந்து நேரடியாக ஹொலிடே அன் ஹோட்டேலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். செல்லும் வழியில் கென்ய ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் விஷேட பாதுகாப்பினை வழங்கினர். அவர்கள் பயணித்த வீதிகளில் விஷேட பயிற்சி அளிக்கப்பட்ட கொமாண்டோ பாதுகாப்பு படையினர் 10 இராணுவ வாகனங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதேவேளை இவர்கள் தங்கியுள்ள ஹோட்டல் மற்றும் அருகில் உள்ள கட்டடங்கள், போட்டி நடைபெறவுள்ள மைதானம், பயிற்சியில் ஈடுபடும் மைதானம் என்பவற்றிலும் குறிபார்த்துச் சுடும் துப்பாக்கி ஏந்திய வீரர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதேவேளை கென்யாவில் தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை எனவும் அப் பாதுகாப்பு ஏற்பாடுகள் அவசியமற்றவை எனவும் நைரோபி ஆட்டத்தில் தாம் பங்கு பற்றுவதில் மிகவும் ஆர்வமாக உள்ளதாகவும், இலங்கை அணித்தலைவர் சனத் ஜெயசூரியா தெரிவித்துள்ளார்.


அவுஸ்ரேலிய அணி வீரர் றொபின் பீற்றர்சன் பந்தை நோக்கி பாயும் காட்சி



நசீர் குசைனின் விக்கெட்டைக் கைப்பற்றிய [illegible] வக்கார் யூனிஸ்

## இன்றைய ஆட்டம்

**மேற்கிந்தியத்தீவு**
**எதிர்**
**கனடா**
(செஞ்சூரியன் பார்க் மைதானம்)
2.00 P.M

**இந்தியா**
**எதிர்**
**நமீபியா**
(பீட்டர் மெரிட்ஸ் பார்க்)
2.00 P.M




## உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### தென்னாபிரிக்கா எதிர் பங்களாதேஷ்

#### பங்களாதேஷ்

**35.1ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 108ஓட்டங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| எல்.சஹாரியர் | c பீற்றர்சென் | b பொலக் | 0 | (12) |
| இ.ஹக் | c ஜென்டேகி | b பொலக் | 3 | (30) |
| எம்.ஆஸ்ரபுல் | c பௌச்சர் | b நித்தினி | 6 | (10) |
| ஹுசைன் | c கலீஸ் | b ஹோல் | 11 | (14) |
| எ.கபாலி | c டிப்பென்னர் | b ஜென்டேகி | 2 | (15) |
| இம்ரான் | c டிப்பென்னர் | b ஹோல் | 9 | (24) |
| கெ.மசூத் | c பௌச்சர் | b நித்தினி | 29 | (67) |
| மாக்மட் | c குளுஸ்னர் | b நித்தினி | 23 | (35) |
| எம்.ர.்.பிக் | Run out | | 1 | (2) |
| எம்.இஸ்லாம் | c டிப்பென்னர் | b நித்தினி | 0 | (2) |
| யூபைர் | Not out | | 4 | (8) |

உதிரிகள் - 20

**பந்து வீச்சு -தென்னாபிரிக்கா**

| | | | |
|---|---|---|---|
| பொலக் | 6 | 8 | 2 |
| நித்தினி | 7.1 | 24 | 4 |
| ஜென்டேகி | 5 | 17 | 1 |
| ஹோல் | 6 | 15 | 1 |
| கலீஸ் | 5 | 19 | - |
| பீற்றர் சென் | 6 | 21 | - |

#### தென்னாபிரிக்கா

**12ஓவர்கள் முடிவில் விக்கெட் இழப்பின்றி109 ஓட்டங்களை பெற்று 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.**

| | | | |
|---|---|---|---|
| கிப்ஸ் | Not out | 49 | (40) |
| கிஸ்டன் | Not out | 52 | (32) |

உதிரிகள் – 08

**பந்து வீச்சு - பங்களாதேஷ்**

| | | | |
|---|---|---|---|
| இஸ்லாம் | 4 | 26 | - |
| யூவைனர் | 2 | 24 | - |
| முகமட் | 2 | 20 | - |
| ர.்.பிக் | 2 | 20 | - |
| கபாலி | 2 | 18 | - |

## அவு.கிரிக்கெற் வீரர் வோனுக்கு ஒருவருடகால போட்டித்தடை

தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து உட்கொண்ட குற்றத்திற்காக அவுஸ்திரேலிய கிரிக்கெற் வீரர் ஷேன் வோனுக்கு ஒரு வருட காலம் போட்டியில் விளையாடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பாவித்தமை தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் அவுஸ்ரேலிய கிரிக்கெற் சபையின் மெல்போர்ன் தலைமையகத்தில் ஆரம்பமாகி நேற்றுவரை தொடர்ந்து நடைபெற்றது.

மூன்றுபேரைக் கொண்ட விசாரணைக் குழு 8மணிநேரம் ஏழு சாட்சிகளை விசாரணை செய்தபின்னர் வோனுக்கு ஒருவருடகால போட்டித் தடையை விதித்தது.

இவரின் மீதான போட்டித்தடை கடந்த 10ம் திகதி முதல் அமுலாகியுள்ளதாகவும் விசாரணைக் குழு ஷேன் வோனிடம் அவரது போட்டித் தடைபற்றி தெரிவித்தபோது அவர் திகைப்படைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை போதைவஸ்துப் பாவனைக்காக எதிர்ப்பு நடவடிக்கைகளில் தான் ஒரு சூழ்நிலைக் குற்றவாளியாகியிருப்பதாக கூறிய ஷேன் வோன் இத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யப் போவதாகவும் தான் ஒருபோதும் போதை மருந்து பாவித்ததில்லை எனவும் இனிமேல் பாவிக்கப்போவதில்லை எனவும் கூறியுள்ளார்.

இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன் இணைந்து

**வலம்புரி**

நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

**போட்டியில் பங்கு பற்றுங்கள் பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்**

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

கிரிக்கெற் பரிசுப் போட்டி

**வலம்புரி**

இல 15, வெள்ளாந்தெரு

யாழ்ப்பாணம்.

உங்கள் விடையுடன் தவறாது இக் கூப்பனை வெட்டி அனுப்புங்கள்

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003

முழுப்பெயர் : ..................

முகவரி : ..................

தே.அ.அ.இல : ..................

கையொப்பம்: ..................

அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி

மார்ச் 15, 2003

## வீடமைப்பு அபிவிருத்தி
# நிதிக்கூட்டுத் தாபனம் வங்கியாகத் தரமுயரும்

(கொழும்பு)

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபம் வங்கியாக தரமுயர்த் தப்படவுள்ளது.

இது தொடர்பான திருத்தங்கள் கடந்த வியாழக்கிழமை பாராளுமன் றத்தில் வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானால் சமர்ப்பிக்கப் பட்டது.

இதனைச் சமர்ப்பித்து அங்கு உரையாற்றிய அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், தமக்கென குடியிருப் புக்களை உருவாக்கிக் கொள்ளும் குறைந்த வருமானம் பெறும் குடும பங்களுக்கு அதிக வீட்டுக் கடன்களை வழங்குவதே இதன் நோக்க மாகும்.

இவ்வாறு வீடமைப்பு அபிவிருத திக் கூட்டுத்தாபனத்தை வங்கியாக தரமுயர்த்துவதன் மூலம், வருடாந் தம் வழங்கப்படும் கடன்களை 100 சதவீதத்தால்அதிகரிக்க முடியும் என்றார். (உ-10)

## பொலிஸ் நிலையத்தை சூழ்ந்து பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் பத்து பேரை பலாங்கொடை பொலிஸார் கைது செய்ததை எதிர்த்து பெருமளவு மாணவர்கள் பொலிஸ் நிலையத் தை சூழ்ந்து கொண்டு நின்று கடந்த வியாழனன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், பொலிஸ் நிலையத் தின்மீது கற்கள், தடிகள் போன்றவற் றையும் வீசினர்.

இதனைக் கட்டுப்படுத்தும் விதத் தில பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர்.

இதனால் பலாங்கொடை நகரத் தில் பெரும் கலகச் சூழ்நிலை தோன்றி யது. மு.ப. 11.45 க்கு தொடங்கிய குழப்பம் பி.ப 2.00 மணிவரை நீடித்தது.

வீதிநாடகங்களை ஏற்பாடு செய்வ தில் ஈடுபட்டிருந்த மாணவர்களில் பத்துப்பேரை அண்மையில் கைது செய்த பொலிஸார் அவர்களை பலாங்கொடை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். இதையடுத்து மாணவர் கள் தலா 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இதனைக் கண்டித்தே சுமார் ஆயிரம் வரையிலான மாணவர்கள் பொலிஸ் நிலையத்தை சூழ்ந்து நின்று கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். கல்வீச்சில் ஒரு பொலிஸார் காய மடைந்தார். 15 வரையான மாணவர் களும் காயமடைந்துள்ளனர்.(உ)

## மீளக்குடியமர்ந்தோர் வனத்திற்கு

(கல்வியங்காடு)

ஜே/109 நல்லூர் கிராம உத்தி யோகத்தர் பிரிவிலிருந்து 2000ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து மீளக்குடிய மர்ந்தவர்கள் தங்களது அடையாள அட்டை, பங்கீட்டு அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றுடன் எதிர்வரும்25ஆம்திகதிக்கு முன்னர் வந்து சந்திக்குமாறு அப்பகுதி கிராம உத்தியோகத்தர் அறிவித்துள் ளார். (உ-54)

## பளை செ.ச.கிளை மீண்டும் கிளி.யுடன்

(கிளிநொச்சி)

கடந்த பத்துவருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணச் செஞ்சிலு வைச சங்கத்துடன் இணைந்திருந்த பளைப்பிரதேச செயலக செஞ்சிலு வைச் சங்கக் கிளை மீண்டும் கிளி நொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்துள்ளது. (உ-264)

## ஆண்டுவிழா

(கொழும்புத்துறை)

கோப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஆண்டு விழாவும், சான்றிதழ் வழங்கும வைபம் இன்று காலை 9.30 மணிக்கு சமமேளன முன்றலில் நடைபெற வுள்ளது.

மேற்படி நிகழ்வில், பிரதம விருந தினராக இந்து கலாசர அமைச்சர் தி.மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினர் களாக தே.இ.சே. மன்ற மாவட்ட இயக்குநர் தி.சிவதெட்சனா மூர்த்தி, கோப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகஸ்தர் ச. வீரசிங்கம், வலிகிழக்கு அரசியல துறைப்பொறுப்பாளர் சி. யாழவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள் ளனர். (உ-51)

## அரசுக்கு எதிராக மார்ச் 10 இல் மாபெரும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது முன் னெடுக்கபபட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும், ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நடவடிக்கை களைக் கண்டித்தும் மார்ச் மாதம் 10 ந்திகதி கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம் பெறவுள்ளது.

ஜனாதிபதி தலைமையில நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கூட்டத் திலேயே இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது. (த)

## மண்டபம் அகதிமுகாம்
# கிணற்றில் இருந்து இலங்கைத் தமிழ் சிறுவனின் சடலம் மீட்பு

(கொழும்பு)

தமிழ்நாடு மண்டபம் அகதி முகாமில் அமைந்திருந்த கிணறு ஒன் றில இருந்து அழுகிய நிலையில் இலங்கைத் தமிழ்ச் சிறுவனின் சடலத்தை கடந்த செவ்வாய்க்கிழமை தமிழகப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாரால் மீட்கப்பட்ட இச்சடலம் 17 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தச்சிறுவனின்இறப்புத் தொடர்பாக தமிழகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின் றனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் இடம் பெயர்ந்து அகதிகளாக ஆயிரத்து 300 இலங்கைத் தமிழர்கள் மண்ட பம் முகாமில் தங்கியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (உ-8)

# அனுரா மீதான வழக்கு விசாரணை யூனில்

(கொழும்பு)

முன்னாள் சபாநாயகரும் தற்போ தைய நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரா பண்டார நாயக்கா மீது வர்த்தக நுகர்வோர் விவகார அமைச் சர் ரவி கருணாநாயக்கா தாக்கல் செய்த அவதூறு வழக்கு விசாரணை எதிர்வரும் யூன் மாதம் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரச்சினைகளை ரவிகருணாநாயக் காவே உருவாக்குகிறார் என அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தேவையற்றமுறை யில் அவதூறுவிளைவித்தமைக்காக 50 கோடி ரூபாவை தனக்கு நட்டஈடாக அனுரா பண்டார நாயக்கா தரவேண் டும் எனவும் அமைச்சர் ரவிகருணா நாயக்கா கூறினார். (உ-10)


MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை
நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்
40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச்செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள், சிறுநீர்ப்பரிசோதனை.
இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த flz jjp! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C/5602]





உங்களுக்குச் சமாதானம்



பாஸ்ரர். வின்சன்ட் சகாயநாதன் (கனடா)

நற்செய்திப் பெருவிழா 2003

சுவி.மோகன் C. லாசரஸ் (இந்தியா)

இடம்: மானிப்பாய் செல்லமுத்து மைதானம்
திகதி: பெப்ரவரி 20,21,22,23
நேரம்: பி.ப.4.00 மணி

அனுமதி இலவசம்



பாஸ்ரர். ஜோன்ராஜ் (இந்தியா)

காலையில் விசுவாசிகளுக்கான வேதப்படிப்பு மானிப்பாய்ப்பிரதேச மண்டபத்தில் காலை 9.00மணிக்கு நடைபெறும்.



அந்தோனி
பல வருடங்களாக அசுத்த ஆவியின் பிடியிலிருந்தேன் ஜெப வேளையில் இயேசு விடுதலை தந்தார்.



பூங்கோதை
3 வருடங்களாக மார்புக் கட்டியினால் மிகவும் கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில் இயேசு விடுதலை தந்தார்.



ஐசா காதிர் முகம்மது
5 வருடங்களாக சிறுநீரகம் பாதிக்கப்பட்டு,சரீரமெல்லாம் வீங்கியிருந்தது. ஜெப வேளையில் இயேசு விடுதலை தந்தார்.

தொடர்புகளுக்கு :- 021 222 3653, 021 222 2930
வாருங்கள்! ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்!!
4 நாள்களும் பெருவிழா முடிவில் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

SPONSORED BY:TORONTO HARVEST MISSIONARY CHURCH
96,Benshire Dr.Scarborough, ON MIH IM5, Canada.
TEL.(416)289-3662 FAX:(416)289-2775

# அமெரிக்க கேளிக்கை விடுதியில் தீ விபத்து; 86 பேர் மரணம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் ரூட் தீவில் இருக்கின்ற இரவுக் கேளிக்கை விடுதியில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தீ விபத்தில் 86 பேர் உடல் கருகி பலியானதுடன் 160 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற வேளை கேளிக்கை விடுதியில் 250ற்கும் மேற்பட்ட உல்லாசப் பயணிகள் தங்கியிருந்தனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் தீயின் போது ஏற்பட்ட கடுமையான புகையால் மூச்சுத் திணறியே உயிரிழந்துள்ளனர். காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்த தீ விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று இது வரை கண்டறியப்படவில்லை.


அதற்கான காரணத்தைக் கண்டறியும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும், உயிரிழந்தவர்களை மீட்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

அமெரிக்காவின் நியுயோர்க் நகருக்கு அருகில் இருக்கின்ற பெற்றோலியக் களஞ்சியம் ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


ஸ்ரேஜியின் தீவில் ஏற்பட்டுள்ள இந்த வெடி விபத்தையடுத்து பெற்றோலியக் களஞ்சியம் தொடர்ந்தும் எரிந்த கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11இல் அமெரிக்காவில் இடம்பெற்ற தீவிரவாத தாக்குதலையடுத்து இந்த எண்ணைக் களஞ்சியத்திற்கு பாரிய பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தது.

அமெரிக்கப் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த பல உயர் அதிகாரிகளின் வதிவிடங்கள் இந்தப்பகுதியில் இருப்பது குறிப்பிடத்தக்கது.(உ-2)



மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நேற்று துவங்கிய அணிசேரா நாடுகளின் மாநாட்டில் மலேசிய வெளியுறவு அமைச்சர் சையிட் அமீட் அல்பர் துவக்க உரையாற்றிய போது எடுக்கப்பட்ட படம். இந்த மாநாட்டில் இந்தியா உட்பட 144 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள்.


நியூயோர்க்கில் நடைபெற்ற அமெரிக்கன் இன்டர்நஷனல் பொம்மை கண்காட்சியில் உலகம் முழுவதும் உள்ள 1600 பொம்மை தயாரிப்பு நிறுவனங்கள் தங்களுடைய புதிய பொம்மைகளைப் பார்வைக்கு வைத்துள்ள காட்சி.

## இரசாயனஆயுதங்களுடன் சென்ற வாகனம் சிக்கியது

(அங்காரா)

துருக்கியில் இரசாயன ஆயுதங்களையும் அதற்கான மூலப்பொருட்களையும் கொண்டு சென்ற வாகனத்தைக் கைப்பற்றிய பொலிஸார் அதில் சென்ற 7 பேரை சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட இரசாயனப் பொருட்கள் 3 ஆயிரத்து 500 கண்ணாடிக் குழாய்களில் அடைக்கப்பட்டிருந்தன என்று கூறப்படுகின்றது.

இந்த ஆயுதக் கடத்தல் குறித்து மேலதிக விசாரணைகளை துருக்கிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ-2)

# படைத்தள உதவி வழங்குவதானால் எழுத்து மூலமான உறுதி வேண்டும்

## அமெரிக்காவை துருக்கி கேட்கிறது.

(அங்காரா)

ஈராக் மீதான யுத்தத்தின் போது அமெரிக்கா எழுத்து மூலமான உறுதிகளை வழங்கும் வரை அமெரிக்கத் துருப்புக்களுக்கு தமது படைத்தளங்களை திறந்து விட மாட்டோமென்று துருக்கி ஜனாதிபதி தைப் எரோக்கா கூறியுள்ளார்.

கடந்த இரு நாட்களுக்கு முன்னர் இது தொடர்பான விவாதம் துருக்கிப் பாராளுமன்றத்தில் நடைபெறவிருந்த போதிலும்,

அரசியல் இராணுவ விவகாரங்களைக் கருத்தில் கொண்டு துருக்கிப் பிரதமர் அப்துல்லாகல் விவாதத்தை ரத்துச் செய்துள்ளார்.

இந்த நிலையிலேயே துருக்கி ஜனாதிபதி எழுத்து மூலமான ஒப்பந்தம் ஒன்றுக்கு வந்த பின்னர் படைத்தளம் அமெரிக்காவுக்கு வழங்குவது குறித்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று கூறியுள்ளார். (பி-2)

## குற்றவாளிகள் இருவர் கைது

(புதுடில்லி)

மும்பை தொடர் குண்டு வெடிப்பு வழக்கின் முக்கிய குற்றவாளியான டாவுட் இப்ராஹிம் சகோதரரான இஃவாஹ்ஹஸ்கரும் அவரது நெருங்கிய கூட்டாளி இஃசாஜ் பட்டானும் டுபாயில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவரையும் மத்திய புலனாய்வுத் துறை அதிகாரிகள் கைது செய்து மும்பாய் விமான நிலையத்திலேயே விசாரணை நடத்தினர் என்று மும்பை புலனாய்வுத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உலக தரிசனம்

# அல்கெய்டாக்கள் மூவருக்கு 10 வருடச் சிறைத்தண்டனை

(ராபர்)

அல்கெய்டா இயக்கத்தைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படும் மூன்று பேருக்கு மொராக்கா நீதிமன்றம் 10 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

சவூதி அரேபியாவைச் சேர்ந்த இந்த மூன்று பேர் மீதும் கடந்த வருடம் ஜிப்ரால்டர் பகுதியில் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் மீது தாக்குதல் மேற்கொள்ள முற்பட்டமை கொலை முயற்சி மற்றும் அனுமதியின்றி மொராக்கோவில் தங்கியிருந்தமை போன்ற குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, இவர்கள் தாக்குதல் நடத்தத் தேவையான வரைபடங்கள் மற்றும் தேவையான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள ஒத்துழைப்பு வழங்கிய 3 பெண்கள் உட்பட பலருக்கு மொராக்கோ நீதிமன்றம் நீண்ட கால சிறைத்தண்டனை வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-2)


சீனாவில் உள்ள ஒரு ஏரியில் படிந்துள்ள மாசுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள சில ஊழியர்கள்

# முகாபே பிரான்ஸ் பிரவேசம் பத்திரிகைகள் கண்டனம்

(பாரிஸ்)

சிம்பாபே ஜனாதிபதி பிரான்ஸ் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டமை தொடர்பாக லண்டன், பாரிஸ் நகரங்களில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

52 நாடுகள் கலந்து கொள்ளும் ஆபிரிக்க மாநாடு கடந்த இரு தினங்களுக்கு முன்னர் பாரிஸில் ஆரம்பமானது.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் பயணத் தடை விதிக்கப்பட்டிருந்த சிம்பாபே ஜனாதிபதி ரெபேட் முஹாபே இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்.

இதனையடுத்து சர்வதேசக் கவனம் இது விடயத்தில் திரும்பியுள்ளதுடன் கண்டனங்களும் எழுந்துள்ளன.

இதேவேளை, சிம்பாபேயின் உயர் நீதிமன்ற நீதிபதியொருவர் அந்த நாட்டின் துருப்புக்களால் அண்மையில் கைது செய்யப்பட்டமைக்கு ஐ.நா சபை தனது அதிருப்தியையும் வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

பாரிஸில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆபிரிக்க மாநாட்டில் கலந்து கொண்ட ரெபேட் முஹாபேயை, பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்ஷெராக் தனிப்பட்ட முறையில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன் போது சிம்பாபேயில் தற்போதுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நிலை திருப்தியற்றதொன்றாகக் காணப்படுகின்றதென அதிருப்தி வெளியிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. (உ-2)


பாகிஸ்தானின் கோஹாட் அருகே தௌலஞ்ச் மலைப்பகுதியில் விழுந்து நொறுங்கிய பாகிஸ்தான் விமானப்படை விமானத்தின் பாகங்களை மீட்கும் பணியில் அந்நாட்டு இராணுவ வீரர்கள். இந்த விமானத்தில் பாகிஸ்தான் விமானப் படைத்தளபதி முஷாஃப் மீர் அலிஉட்பட 17 பேர் கொல்லப்பட்டனர்.

# இமாலய சாதனை படைத்த இந்திய இளைஞர்

(லக்னோ)

மூளையில் அகராதியை வைத்திருக்கும் வாலிபரை பார்த்திருக்கிறீர்களா? இருக்கிறார் ஒரு இந்திய இளைஞர் டிக்ஷனரியில் உள்ள அனைத்து வார்த்தைகளையும் பக்க இலக்கத்துடன் மனப்பாடம் செய்து இந்த இளைஞன் சாதனை படைத்துள்ளார். ஆங்கிலத்தில் ஒரு வார்த்தைக்கு அர்த்தம் தெரிய வேண்டுமானால் உடனே புரட்டப்படுவது அகராதி. பள்ளி மாணவர்கள் முதல் கல்லூரிப் பேராசிரியர்கள் வரை ஒரு வார்த்தைக்கு அர்த்தம் தெரியாது விட்டால் உடனடியாக அகராதியை எடுத்துப் பார்த்து அந்த வார்த்தைக்குரிய அர்த்தத்தைப் பார்த்த பின்னரே தெளிவடைவர்.

இன்னமும் ஆங்கிலத்தில் உள்ள அனைத்து வார்த்தைகளுக்கும் முழுமையாக அர்த்தம் தெரிந்தவர்கள் யாரும் இல்லையென்றே சொல்ல வேண்டும். அதேபோல் அகராதியில் உள்ள அனைத்து வார்த்தைகளையும் நினைவில் வைத்து உள்ளவர்களும் யாரும் இல்லையென சொல்ல முடியும். ஆனால் இவையனைத்தையும் தனது மூளையில் பதிவு செய்திருக்கிறார் ஒரு இந்தியர். ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்களால் கூட முடியாத ஒரு காரியத்தை ஒரு இந்தியர் சாதித்துள்ளார்.

ஆங்கிலத்தில் புதிது புதிதாக வந்துள்ள வார்த்தைகள் மற்றும் அதற்குரிய அர்த்தங்கள் அடங்கிய சுமார் 80 ஆயிரம் வார்த்தைகளை இவர் தனது மூளையில் மனப்பாடம் செய்து வைத்து சாதனை படைத்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஜெயின் என்ற இந்த இளைஞரின் சாதனை கின்னஸிலும் லிம்கா சாதனைப் புத்தகத்திலும் ஒரு தனி இடத்தைப் பிடித்துள்ளது. (உ)

# எயிட்ஸ் ஒழிப்பிற்கு உதவுக! அனான் அழைப்பு

(பாரிஸ்)

ஆபிரிக்கக் கண்டம் முழுமையும் பரவியுள்ள எயிட்ஸ் நோயை முற்றாக ஒழிப்பதற்கு உலகின் செல்வந்த நாடுகள் உதவ வேண்டுமென ஐ.நா பொதுச் செயலர் கோபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாரிஸில் நடைபெற்று வரும் பிராங்கோ ஆபிரிக்க மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கோபி அனான் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

செல்வந்த நாடுகள் இதற்கு உதவி வழங்கும் உயர் மட்டக்குழு வொன்றைத்



தாம் நியமிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தனது உரையில் தெரிவித்துள்ளார். (உ-2)

## இன்று ஒரு தகவல்

# கள்வர்கள் பலவிதம்

ஒரு பெரியவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். ''திருடர்கள் எத்தனை வகை ''என்பது தான் கேள்வி. எதற்காக அந்தக் கேள்வியை என்னைப் பார்த்துக் கேட்டாரோ தெரிய வில்லை. நான் பதில் சொன்னேன். திருடர்களில் எத்தனையோ வகைகள் உண்டு. கார்த்திருடன்-சைக்கிள் திருடன்-முகமூடித் திருடன் இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்... இருந்தாலும் என் சிற்ற றிவுக்கு எட்டிய வரையில் திருடர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் என்று நினைக்கிறேன். ஒன்று இரவில் திருடுகின்ற திருடன். மற்றது பகல் திருடன் என்றேன்.

பெரியவர் சிரித்தார். ''என்ன சிரிக்கிறீகளே? ''என்றேன். கள்வர்கள் நான்கு வகைகள் என்று ஆரம்பித்தார் அவர். எப்படி? என்றுகேட்டேன். சாப்பாட்டுக்கு இல்லாமல் திருடுகிறார்கள் பாருங்கள் அது ஒரு வகை. சாப்பிட இருந்தும் திருடுகிறார்கள் அது ஒரு வகை. இவற்றைத் தவிர இன்னும் இரண்டு வகைத் திருடர்கள் உண்டு. அவை எவையென்றால் ஆண்டவனிடம் இருந்து நாம் திருடுகின்ற திருட்டு ஒன்று. நம்மிடமிருந்து ஆண்டவன் திருடுகிற திருட்டு ஒன்று என்றார். எனக்கு ஒன்றும் புரிய வில்லை. என்ன சார்இது ஆண்டவனையேதிருடன்என்றுசொல்கிறீகளே?என்றேன் ஆச்சரியமாக!

ஆமாம்!ஆண்டவனைக் கள்வன் என்று சொல்வதில்லையா... காஞ்சிபுரத்திற்குப் பக்கத்திலே திருக்கார்வனம் என்று ஒரு ஊர் இருக் கிறது... அங்கே இருக்கிற பெருமாளுக்குக் கள்வர் என்று தான் பேர். அதுமட்டுமில்லை. திருமங்கையாழ்வார் தம்முடைய திருநெடுந்தாண்ட கத்திலே ''கார் வனத்துள்ளாய் -கள்வா! ''என்று தான் அழைக்கிறார் என்று நிறைய உதாரணங்கள் சொல்ல ஆரம்பித்தார். அதன் பின்னர் அவரிடம் பேசி நான் புரிந்து கொண்ட விபரங்களை இப்பொழுது உங்க ளிடம் சொல்கின்றேன்.

அவர் சொன்ன முதல்வகைத் திருடர்கள்-சாப்பாட்டுக்கு இல்லாமல் திருடுகிறவர்கள். இவர்களைத் திருத்தி விடலாம். சாப்பிட இருந்தும் பணம் சேர்க்க வேண்டும் என்கின்ற ஆசையால் பொய் கணக்குகள் எழுதுகிறார்கள் பாருங்கள். அவர்கள் தான் இரண்டாவது வகை. மூன்றாவது வகைத்திருட்டுத் தான் மிகப் பெரிய திருட்டு இறைவனுக்குச் சொந்தமானதை நம்முடையதென்று நினைக்கிற திருட்டு. எது இறை வனுக்குச் சொந்தமானது? ''ஆத்மா! ''பகவானுக்குச் சொந்தமான ''ஆத்மா''வை நம்முடையது என்று நினைப்பது தான் அந்த மாபெரும் திருட்டு. இதற்குப் பெயர் தான் ஆத்மாபஹாரம் சரி... இதற்குப் பரிகாரம் என்ன?எல்லாம் இறைவனுடையவை... ''நமக்கு ஒன்றும் இல்லை'' என்று நினைப்பது தான் இதற்குப் பரிகாரம்.

இவை எல்லாம் இருக்கட்டும். நாலாவது திருட்டு ஒன்று சொன் னோமே! ஆண்டவன் நம்மிடமிருந்து திருடுவது! அது எப்படி? ஆண்ட வனைக் கள்வன் என்று சொல்கிறார்கள். அது சரி... அவர் எதைத் திருடினார். இன்னொருவருக்குச் சொந்தமான ஒன்றை எடுத்து வைத்துக் கொள்வது தான் கள்ளத்தனம். ஆனால் ஆண்டவன் என்று எடுத்துக் கொண்டால் இருப்பது எல்லாமே அவனுக்குச் சொந்தம். அப்படி இருக்கும் பொழுது அவரை எப்படி கள்வன் என்றுசொல்வது?

இதற்கு என்ன விளக்கம் சொல்கிறார்களென்றால் ஆண்டவனுக்கு உருவமே கிடையாது. அருவமாக இருக்கிறவன். அப்படி உள்ள பகவான் நம்மைப் போன்று உருவத்தில் இருக்கிறான். நம்மைப் போன்றே கை, கால், மூக்கு எல்லாம் இருக்கிறது. இந்த உருவம் நம்மிடம் இருந்து திருடியது தானே. அவன் தன்னுடைய திருமேனியை நமக்குக் காட்டாமல் அதாவது தரிசனம் அளிக்காமல் இருப்பது கள்ளத் தனம் தானே! அதனாலேதான் இதுவும் ஒரு பெரிய திருட்டு. இருப் பதிலேயே பெரிய திருட்டு என்கிறார் என்னிடம் பேசிக் கொண்டிருந்த பெரியவர். திருட்டை ஆன்மிக நோக்கிலே அவர் பார்க்கிறார். நமது பார்வையில் இதை விட அபூர்வமான திருட்டுக்கள் இங்கே உண்டு. அபூர்வமான திருடர்களும் உண்டு.

ஒரு திருடன் சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே போனான். கொஞ்ச நாட்களில் மறுபடியும் திரும்பிச் சிறைக்கு வந்து விட்டான். அப்பொழுது சிறை அதிகாரி அவனுக்குப் புத்திமதி கூறினார். ஏனப்பா.. இப்படி அடிக்கடி தப்புப் பண்ணிக் கொண்டு ஜெயிலுக்கு வந்து விடுகிறாயே...! உனக்குச் சொந்த பந்தம் ஏதும் இல்லையா? உன் அப்பா, அண்ணன், தம்பிமாருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்கிற ஆசையில்லையா? என்று கேட்டார். அவர்களுடன் சேர்ந்து வாழ வேண்டு மென்கின்ற ஆசை எனக்கு நிறைய உண்டு சார்! என்றான் அவன். அப்படியென்றால் எதற்கு இப்படி ஜெயிலுக்கு வந்து விடுகிறாய்? என்றார் இவர். அவர்கள் எல்லோரும் இங்குதானே சார் இருக்கிறார்கள் என்றான் அவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இசை விழாவின் இறுதி நாளான இன்று....

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசைவிழாவின் இறுதி நாளான இன்று, காலை எம்குகதாஸ், ஏ.ஜெயச் சந்திரன், ஏ.ஜெயா, ஆர்.ரஞ்சன் ஆகியோரின் மங்கள இசையும் சுஹரி வெங்கடேஸ்ராம், ஸ்ரீகௌரி, வெங்கடேசசர்மா ஆகியோரின் பாட்டுக்கச்சேரிகளும் ஜீ.பத்மராணி, கே.நர்மதா, என்.லோபினி, ஜே.மதி வதனி, எம்.தர்மிளா, ரி.இந்துமதி ஆகியோரின் குழுப்பாடலும் இடம் பெறவுள்ளன.

தொடர்ந்து எஸ்.உருத்திரசேகரத் தின் புல்லாங்குழல் இசையும் எம்.எம்.ஜோஷப் மேரின், நந்தினி விஜயகுமாரன், பஞ்ச மூர்த்தி குமரேஸ் ஆகியோரின் பாட்டுக் கச்சேரியும் நடைபெறவுள்ளன.

மாலை நிகழ்வுகளாக காஞ்சனா, க.அனுஷ்யா, க.கீதாஞ்சலி, பு.சுமதி ஆகியோர் வழங்கும் வீணை இசை, இவ்வாண்டு மன்றத்தினால் நடத்தப் பட்ட இசைப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்களான சு.மதுராங்கி, அ.சிவசக்தி, நா.பரந்தாமன், ஆகி யோரின் இசை நிகழ்வுகளும் ந.ஜனனி யின் வீணை இசை, ப.சாரங்காவின் பாட்டுக்கச்சேரி, என்.கே.பத்மநாதன், பி.பார்த்தீபன் கே.கணேசமூர்த்தி, எஸ்ஞக்குமார் ஆகியோரின் நாதஸ்வர கச்சேரிகளும் சாவகச்சேரி திலகநந் னாவய மாணவிகளின் பரதநாட்டியமும் இடம்பெறவுள்ளது. (உ-10)

## இடம் பெயர்ந்த குடும்பங்கள்குறித்த

# முறையான விபரத் திரட்டல்கள் குடாநாட்டில் இடம்பெறவில்லை

## துணைவேந்தர் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடந்த இருபது வருடங்களாக சனத் தொகைபற்றிய சரியான விபரங்கள் பேணப்படவில்லை. புள்ளி விபரங் களை ஒவ்வொருவரும் தாம் விரும்பும பிரகாரம் குறிப்பிட்டுவருகின்றனர். அதே சமயம், யாழ்ப்பாணக் குடா நாட்டில் சனத்தொகை குறைந்தது மறைமுக ஆசீர்வாதமாகும். (BLESSING IN DISGUISE)

யாழ்ப்பாணப பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அண்மையில் பல்கலைக்கழக புவியில் துறை மண்டபத்தில் இடம்பெற்ற குடிசனத் தொகை பற்றிய ஆய்வரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகை யில் இவ்வாறு குறிப்பிட்டார்.

புவியியல் துறைத்தலைவர் பேரா சிரியர் க.குகபாலன் தலைமையில் இடம்பெற்ற, இலங்கை குடித்தொகை சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். முரளியும் கலந்து கொண்டார்.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது, வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள ஏனைய மாவட் டங்களிலும் பார்க்க யாழ்ப்பாணக் குடாநாடு உள்ளூர் மற்றும் சர்வதேச இடப்பெயர்வுகள காரணமாக குடிசனத் தொகையில் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

அதே சமயம், இவ்இடம்பெயர்வு கள பற்றிய சரியான, முறையான புள்ளி விபரங்கள் கிடைக்காமை பெரும் பல வீனமாகவுள்ளது. இங்கிருந்து எத்தனை குடும்பங்கள்,

1984க்குப் பின் தென்னிலங்கைக் கும் வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளன என்பது பற்றிய விபரங்களைப் பெற்றுகொள்ள முடியாத நிலைமை தான் இப்போதும் இருக்கின்றது.

1981 ஆம் ஆண்டுக்குப்பின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் குடிசனத் தொகைக்கணிப்பீடு செய்யப்பட வில்லை.

எந்தவொரு பின்தங்கிய அபிவிருத் தியடைந்த நாடுகளிலும் 100 ஆண்டு கால குடிசனப் புள்ளிவிபரங்களைப பெறுவது மிகவும் கடினம் ஆனால், எங்களுடைய நாட்டில் அதைப் பெறக் கூடியதாக இருக்கிறது.

இது மாத்திரமல்ல இறப்பு, பிறப்பு, விவாகம் போன்ற நாளாந்த வாழ் நிலைப் புள்ளி விபரங்களும் எங்களு டைய நாட்டில ஒழுங்காகப் பதியப் பட்டு வந்தது.

ஆனால், அண்மைக்காலங்களில் வாழ்நிலைப்புள்ளி விபரங்களை ஒழுங்காகப் பதியமுடியாமல் போய் விட்டது.

1981, 1984ஆம் ஆண்டு காலப் பகுதியில் உள்வரவும், வெளிவரவும் இடம்பெற்றுள்ளன. இதனைத்தொடர்ந்து சர்வதேச இடப்பெயர்வும் இடம்பெற றுள்ளது.

ஆனபோதிலும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து எத்தனை பேர் இந்தியா, மேற்குஐரோப்பா, வடஅமெரிக்கா, டென்மார்க், நோர்வே போன்ற நாடுகளுக்குக் குடியேறியுள ளனர் என்றோ அல்லது கொழும்பு உட்பட தென்பகுதியில்குடியேறியுள் ளனர் என்றோ சரியான புள்ளிவிபரங்களைப் பெறமுடியாமல் இருக்கின்றது.



அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையில் புரிந்துணர்வு உடன்படிக் கை ஏற்பட்ட பின்னர் தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் மீளக்குடியேறி வருவபவர்களின் தொகை இப்போது அதிகரித்து வருகின்றது.

தற்போது யாழ். குடாநாட்டின் குடிசனத்தொகை 5 லட்சத்து 60 ஆயிரம் என யாழ். அரச செயலகப் புள்ளி விபரங்கள தெரிவிக்கின்றன. ஆயினும், நாம் குடிசனத்தொகையில் இன்னமும்பழையநிலைக்கு வரவில்லை.

இருந்த போதிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் குடிசனத்தொகை இப்போது துரிதமாக அதிகரித்துக் கொண்டு வருகின்றது.

1981ஆம் ஆண்டு நிலைக்கு நாம் வரவேண்டும். கிளிநொச்சியும் யாழ்ப்பாணமும் சேர்ந்து இப்போது மொத்தம் 7 லட்சம் பேர் மட்டுமே இருக்கின்றனர். மூன்று லட்சம் பேர் குறைவாகியுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு, புத்தளம், கண்டி போன்ற இடங்களுக்குச்சென்று குடியேறி யவர்கள் இப்போது இங்கே மீளக் குடியமர்ந்து வரு கின்றனர். ஆனால சர்வதேச நாடுகளுக்கு இடம்பெயர்ந தவர்கள் எக் காரணம் கொண்டும் இங்கே நிரந்தர மாகக் குடியேற வரவே மாட்டார்களென்பதுஉறுதியானவிடயமாகும் எனக் குறிப்பிட்டார். (உ-77)

## இராசி பலன்

**23. 02. 2003**

**(மாசி 11, ஞாயிறு)**

| | |
|---|---|
| சப்தமி | பி.ப 3.29வரை |
| விசாகம் | பி.ப 1.32வரை |
| இராகுகாலம் | 5.01-6.31 |
| சுபநேரம் | 9.31 - 11.01 |

**மேடம்**
அமைதிக்குறைவு உடல்வியாதி, காரிய தடங்கல், வாகன பயம்.

**இடபம்**
திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு காரிய அனுகூலம், தனலாபம்.

**மிதுனம்**
தொழில் சிந்தை,முயற்சி பலிதம், தேக நலன், தனவரவு.

**கடகம்**
தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, குடும்ப யோசனை, சிறுவியாதி.

**சிங்கம்**
ரோகபயம், அற்பர்உறவு முயற்சி தாமதம்,மாதாசுகம்.

**கன்னி**
நினைத்த காரியம் கைகூடும், தன வரவு, கூட்டுமுயற்சி,நல்லஅனுபவம்.

**துலாம்**
கௌரவக்குறைவு பொருள்விரயம், காரிய தாமதம், கடும்வார்த்தை.

**விருச்சிகம்**
கற்பனை மிகுதி, நல்லமுயற்சி, சயன சுகம்,அறிஞர்சந்திப்பு

**தனுசு**
உணர்ச்சி வசப்படல், தந்தைவழி உறவு தனவிரயம், போசனசுகம்.

**மகரம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழில் சிந்தைபெருமையடைதல், குடும்ப சுகம்.

**கும்பம்**
சுபநிகழ்வு உற்சாகம், பிறஉதவி, முயற்சி கைகூடும்.

**மீனம்**
கட்டுப்பாடு, -அலிய தாமதம், பிரயாணம், உடல்நலக்குறைவு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## லஞ்ச ஊழல் ஆணையாளர் மீதான

# குற்றச்சாட்டைவிசாரிக்க தெரிவுக்குழுநியமனம்

(கொழும்பு)

லஞ்ச ஆணையாளர் கிங்ஸ்லி விக்கிரமசூரிய மீது சுமத்தப் பட்டுள்ள தவறான செயற்பாடுகள் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரிப் பதற்கு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் ஒரு தெரிவுக் குழுவை சபாநாயகர் வியாழனன்று நியமித்துள்ளார்.

76 பாராளுமன்ற உறுப்பினர் களால் ஒப்பமிடப்பட்டு சமர்ப்பிக்கப் பட்ட முறைப்பாட்டை விசாரிப் பதற்கு நிலையியற் கட்டளை 78(ஏ)2 ஆம் பிரிவின் கீழ் விசேட நிலை யியற் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குழு தனது அறிதல்களை ஜனா திபதிக்கும்,பாராளுமன்றத்திற்கும் தெரிவிக்கும். குழுவின் உறுப்பினர் களாக மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் எம்.எச். மொஹமத், அமைச்சர்ஹேமகுமார நாணயக் கார, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன, நிமல் சிறிபால டி சில்வா, ரவீந்திர ரன்தெனிய, சுனில் கண்டுநெத்தி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1994ஆம் லஞ்ச ஊழல் சட்டத்தின் பிரிவு2(5) இன் பிரகாரம் ஊழல் ஆணையாளர் கிங்ஸ்லி விக்கிரம சூரிய பதவியிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்று 76 எம்.பிக்கள் சமர்ப்பித்த மகஜரில் கேட்கப்பட் டுள்ளது.

விக்கிரமசூரியஆணைக்குழுவின் ஒரு உறுப்பினரையும் சேர்த்துக் கொண்டு ஜனாதிபதியை சென்று சந்தித்ததுடன், ஜனாதிபதியிடம் பல விபரங்களையும் கூறுமாறு அந்த உறுப்பினரிடம் கேட்டுக்கொண்டி ருந்தார்.

தானும் அமைச்சர் எஸ்.பீ.திஸா நாயக்க தொடர்பான புலன் விசாரணை விபரங்களை ஜனாதிபதிக்கு தெரி வித்திருந்தார். இது விசாரணை களின் இரகசியத்தன்மையை மீறிய செயலாகும் என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## இடுப்புப்பட்டி அகற்றும்

# படையினரின் வீண்முயற்சியை கண்காணிப்புக் குழு முறியடித்தது

(வவுனியா)

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் இடுப்புப்பட்டி அணிந்து சென்ற நான்கு விடுதலைப்புலிகளின் பெண் உறுப் பினர்களை இராணுவம் தடுத்து நிறுத்தி இடுப்புப்பட்டிகளைக் களையு மாறு கோரியதை அடுத்து அப்பகுதி யில் சற்றுப் பதற்றம் நிலவியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா வில் உள்ள விடுதலைப்புலிகளின் மாவட்டச் செயலகத்திற்கு தகவல் அளிக்கப்பட்டதை அடுத்து, செயலக நிர்வாகப் பொறுப்பாளர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்தார்.

இதனையடுத்து, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அப்பகுதிக்கு விரைந்து சென்று புலிப்பெண் போராளிகள் அணிந்திருப்பது சாதாரண கறுப்புப்பட்டி என விளக்கியதை அடுத்து இராணுவத்தினர் அவர் களை செல்லுமாறு பணித்தனர்.(வ)

# பிறந்ததிகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்

(சென்றவாரத்தொடர்ச்சி)

### கேதுவின் பொதுப்பலன்~7

எண்கணித கணக்கின்படி எண்களில் 7 எண்கேது என்று அழைக்கப்படுகிறது. ஞானம், மோட்சம் இரண்டிற்கும் அதிகாரம் பெற்றது கேது என்பதை நாம் அறிவோம்.இதை ஆங்கிலத்தில் ' Seven is the heven' என்றும் தெய்வீகமான ஆண்டவனுக்குரிய எண் என்றும் பலவாறு அழைக்கப்பட்டு வருகிறது. 7,16,25 போன்ற திகதியில் பிறந்தவர்கள் இந்தக்கேது ஆதிக்கத்தில் பிறந்தவராவர். கலை,கலாசாரம், பண்பாடு போன்றவற்றில் இந்த ஏழு எண் காரர்கள் ஆர்வமுடன் நாட்டமும் திறமையும் கொண்டவர்களாக இருபபர். கேதுவைப் போலக் கெடுப்பானுமில்லை, இராகுவைப் போலக் கொடுப்பானுமில்லை, என்று கூறுவது போல் சிலருக்குத் துன்பத்தைக் கொடுத்து விடுகிறது.

இந்த ஏழு எண்காரர்கள் சில நேரங்களில் கலகலப்பாக இருந்தாலும் தனிமையில் இருந்து சிந்தனையால் வருந்திக் கொண்டிருப்பர் .பலரிடம் பழகினாலும் மனம் விட்டு எல்லா விஷயங்களையும் கூறிவிடமாட்டார்கள்.குறிப்பிட்ட சிலரைத்தான் நண்பர்களாக வைத்துக் கொள்வர்.இன்னும் சில ஏழு எண் காரர்களுக்கு உலகமே பொய்யாகத் தோன்றும். எல்லோரையும் ஏமாற்றுக்காரர்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பர். விதி அடிக்கடி என்னைச் சதி செய்கின்றது என்று கூறுவர். உள்ளொன்று வைத்து உதட்டளவில் பேசத்தெரியாததால் இவர்களிடம் நண்பர்கள் அதிகம் சேர்வதில்லை. இவர்களுடைய பேச்சு சில நேரங்களில் கண்டிப்பாகவும், கடுமையாகவும் இருக்கும்.ஆனால இவர்கள் உள்ளம் நல்லது என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களது பெயர் நல்ல எண்களில் அமைந்துவிட்டால் வாழ்க்கை சிறப்பானதாக அமைந்து விடும். அவ்வாறு சிறப்பானதாக அமையா விட்டால் குடும்ப வாழ்க்கை குழப்பம் மிகுந்த வாழ்க்கையாக அமைந்து விடும்.

இன்னும் சிலருக்குத் திருமணம் நடக்காது. தாமதித்துக் கொண்டே செல்லும்.சிலருக்குத்திருமணமாகி விவாகரத்து ஆகிவிடும். பார்ப்பதற்கு இவர்கள் முகம் சோகம், அமைதி, கலை உணர்வு,சிந்தனையில் மாறி மாறக் காட்சியளிக்கும். முழுமையான நிறைவோடு வாழ்க்கை அமையவில்லை என்ற ஏக்கம் என்றும் உண்டு. சநதோசமாக இருந்தால் விரைவில் திடீரென்று இவர்கள் மனதில் சோகம் குடி கொள்ளும்.சில பணக்காரர்கள் கூட குடும்ப வாழ்க்கை சரியாக அமையவில்லை என்று வருத்தப்பட்டதை நான் கண்டிருக்கிறேன். இந்த ஏழு எண்ணிக்கைக்காரர்களின் ஒன்பது வகையானவர்களைப்பற்றி இனிப் பார்ப்போம்.

### உடல் எண்~7 உயிர் எண் ~1

7,16,25, போன்ற திகதியில் பிறந்து தகதி,மாதம்,வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் -1 வருமேயானால் இவர்கள் கேது, சூரியன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். ஏழு என்ற கேது இவர்களுக்கு நல்ல குணத்தையும்,நல்ல அறிவையும் சிந்தனாசக்தியையும் கொடுத்து, உயர்ந்த மனிதராக உருவாக்கும். கவிதை, கதை,கலை,கலாசாரம் போன்றவற்றல் நாட்டம் உள்ளவ்களாக வாழ்வர். தன்னைச் சார்ந்தவர்களுக்கும். தனது குடும்பத்திற்கும் தனது

**சோதிட பலன்**

நாட்டிற்கும் பெருமை தேடித்தரும் உயர்ந்த எண்ணங்கள் கொண்டவர்களாக வாழ்வர்.இளமையிலே காதல் வயப்படக் கூடியவர்கள். தனது பிறந்த திகதிக்குப்பொருத்தமான நல்ல எண்ணில் பெயர் அமைந்து விட்டால் நல்ல குடும்ப வாழக்கை நடத்திச் சிறப்பாக வாழ்வர். பெயர்பொருத்தமற்று அமைந்திருந்தால் குடும்ப வாழ்க்கையில் திருப்தி பெற முடியாது தவிப்பர். சிலர் காதல் திருமணமும்,அப்படிச் செய்த பின் அதனால் குழபபமும் பிரிவும் ஏற்பட்டு வேதனை அடைகின்றனா. ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்தவர்கள் எவ்வித பங்கமுமின்றிச் சிறப்பாக வாழ்வர்.

ஈவு,இரக்கம் கொண்ட இவர்கள் தெய்வ நம்பிக்கையில் சிறந்து விளங்குபவர். பிறருக்கு ஏற்படும் துன்பத்தைக் கண்டு தனக்கு வந்ததாக எண்ணிவேதனைப்படுவர். மத விஷயங்களில் மிகுந்த நாட்டம் உள்ளவர்களாகவும அதைப்பற்றி ஆய்வு செய்பவர்களாகவும் விளங்குவர். இதனால் பலர் இவர்களுக்கு வேதாந்தி என்று பெயர் சூட்டுவர். தனது மதத்தில் இவர்களுக்கு அளவற்ற நம்பிக்கை இருப்பதால் மதக்கோட்பாடுகள் அனைத்தும் வாழ்க்கையின் வழிகாட்டி என்று பின் பற்றுவர். மகிழ்ச்சியான நேரங்களில் சகசமாகப் பழகினாலும், தனிமையில் இருக்கும் போது தனது வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்களை எண்ணிவருந்துவர்.

இன்னும் சில குடும்பவாழ்க்கை குழப்பமானதாக அமைந்து மன வேதனைப்படுவதையும், மறுமணம் செய்து கொள்வதையும் நான் கண்டிருக்கின்றேன் ஆனால் பெயர் பொருத்தமானதாக நல்ல எண்ணில அமைந்து விடடால் நல்ல குடும்ப வாழ்க்கை, நல்ல பணவசதி,நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தைகள் ஆகியவற்றைப்பெற்று வாழ்கின்றனர்.

இன்னும் சிலர் எல்லாவிதத்திலும் சிறப்புற்று வாழ்ந்தாலும், தனக்கு உடல் நிலை சரியில்லையே ,மன நிலை சரியில்லையே குடும்ப வாழ்க்கை சரியில்லையே என்று தன்னந்தனியாக அழுது கொண்டிருப்பர். எல்லோரிடமும் அன்பாகப் பழகும் இவர்கள் பிறருக்குத் தீங்கு செய்யும் காரியங்களில் இறங்க மனம் கூசுவர்.

பார்த்த உடனே இவர்கள் நல்லவர் என்று மற்றவர்கள் புரிந்து கொள்ளும்படி பழகுவர். சில நேரங்களில் ஊமைபோல் இருந்தாலும், பேசுகின்ற சந்தாப்பம் வரும் போது தனது கருத்துக்களை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுவா. வசீகரமான தோற்றம் உடையவர்கள எளிமையான ஆடை அணிந்தால் கூடக்கவர்ச்சியாகவும், தூய்மையாகவும் காட்சியளிப்பர். ஆடம்பரமான கவர்ச்சிப் பொருளில் இவர்கள் மனம் நாட்டம் கொள்ளும். கலை சம்பந்தமான அனைத்து விஷயங்களும் இவர்கள் மனத்திற்குப் பிடித்தவையே. பிறருக்காகத் தனது நேரத்தை ஒதுக்கி உதவி செய்ய முன் வருவர். புகழ்ச்சிக்கு மயங்காத இவர்களை மற்றவர்கள் புகழ்ந்து பேசினால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தனக்குள் தானே தீர்மானித்துக் கொள்வர்.

உண்மையைத் தவிர போலிகளை வெறுப்பதால் மற்றவர்களிடம் அபிப்பிராய பேதம் உண்டாகிக் கொண்டே இருக்கும். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள் பலர் உத்தியோகத்திலும்,சிலர் சொந்தத் தொழிலும் செய்து வருகின்றார்கள். இவாகளுக்குக் கஷ்டம் வரும் போது ஆண்டவனை எண்ணிக் கொண்டே அழுவர். இவர்களுக்குப் பொருத்தமான எண்ணில் வாழ்க்கைத் துணைவர் அமைந்து விட்டால் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால் பொருத்தமில்லாத வாழ்க்கைத் துணைவர் வந்தால் இவர்களது குடும்ப வாழ்க்கை குழப்பம் மிகுந்த வாழ்க்கையாய் ஆகிவிடும்.

பெயர் பொருத்தமாக அமையப் பெற்றவர்கள் பெரும் பதவி வகிப்போர்களாகவும், சிறந்த டாக்டராகவும்,பொறியியலாளராகவும்,கலைத் துறையில் தேர்ச்சி பெற்றவராகவும், அரசியல்வாதியாகவும்,வசதி படைத்த தொழில் அதிபர்களாகவும் வாழ்கின்றனர். இவர்களுக்குத் தனக்கு வரப் போகும் கெடுதல்களையும் நல்லவைகளையும் கனவின் மூலம் முன் கூட்டி அறிந்து கொள்ளும் ஆற்றல் இயற்கையில் இருக்கிறது. எப்பொழுதும் தனக்கு வரப்போகும் எதிர்கால வாழ்க்கையையும், கடந்த கால வாழ்க்கையைப் பற்றியும் சிந்தனை செய்து கொண்டு இருப்பர்.

உடம்பிற்கு ஒரு சிறிய வியாதி வந்தாலும்,உடனே குழம்பி விடுவர். பார்ப்பதற்குத் தைரியசா லிபோல் தெரிந்தாலும்,மனபலம் குறைந்தவர்களே என்று கூறலாம். இவர்களுக்கு வழிபாட்டால் தனக்கு வரப் போகும் கெடுதல்களிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று நம்பிக்கை உண்டு. ஆனால் பெயர் பொருத்தமாக அமையாதவர்கள் பல்வேறு வழியில் மனவேதனைப் படுவதையும நான் கண்டிருக்கிறேன். சிலருக்கு குடும்பப் பிரச்சினையாக இருந்தாலும் பலருக்கு ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு வேதனை அடைவதை நான் கண்டிருக்கிறேன். இதனால் பெயரை நல்ல எண்களில் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டு சிறப்புற்று வாழக் கேட்டுக் கொள்கின்றேன்.

ஆர். ஐ. துரைமுருகர்

### தொழில்

இந்த ஆதிக்கக்காரர்களுக்கு ஆடம்பரம் சம்பந்தமான பகட்டுப் பொருள் அனைத்தும் சிறந்தவையே. துணி வகைகள்,நெருப்பு சம்பந்தமானவை, உலோகம் சம்பந்த மானவை, வாகனம்,கல் சம்பந்தமா னவை, கமிஷன், ஏஜென்சீஸ் போன்றவற்றால் முன்னேற்றம் அடைவர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையா விட்டால் இவர்களது உழைப்பு மற்றவர்களுக்குப் பயன்பட்டு விடும். அதோடு மேற்குறிப்பிட்ட தொழில்களினால் சிறந்த முன்னேற்றத்தைப் பெற முடியாது.பெயர் ஒழுங்காக அமைந்தவர்களுக்கு முன்னேற்றம் சிறப்பாக இருக்கும்.

### நோய்

இவர்களுக்கு மனவியாதி, தேவையற்ற குழப்பங்கள் காரணமாக வியாதி, பல் சம்பந்தமான வியாதி, வயிற்றுக்கோளாறு, பெயர் ஒழுங்காக அமையாதவர்களுக்கு சத்திர சிகிச்சை,இருதயவலி வந்து விடும். பெயரை 42 வருமாறு அமைத்துக் கொண்டால் நோயுள்ளவர்கள் தமது நோயிலிருந்து விடுபடலாம்.

### பெயர் அமைக்கும் முறை

கேது,சூரியன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்குச் சுக்கிரனாகிய 6,15,24,33, 42,51,60,69, போன்ற எண்களிலும், சூரியன் ஆதிக்கமான 19,37,46,64, போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொண்டு சிறப்புற்று வாழலாம்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண்- 6,2,1. யோகமான திகதிகள்-6,15,24;1,10,19,28;2, 11,20,29. யோகமான மோதிரக்கல்- மூன்ஸ்டோன், முத்து ,வைடூரியம், தங்க புஷ்பராகம், கனக புஷ்பராகம், யோகமான நிறம்- பச்சை, மஞ்சள, நீலம்,சந்தன நிறம். ஆகாத திகதிகள்- 9,18,27;8,17,26 ஆகாத நிறம் -கறுப்பு ,சிவப்பு.

(தொடரும்)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்க் கிறிஸ்தவ கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப. 2.00 மணிக்கு கல்லூரி அதிபர் ந. சிவகடாட்சம் தலைமையில் பாடசாலையின் நவரட்ணராஜா விளையாட்டுத்திடலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்,பிரதம விருந்தினராக இளைப்பாறிய உப அதிபர் பி.ரா.ராஜாவும்,சிறப்பு விருந்தினராக மேலதிக மாகாணகல்வி அலுவலக பாடசாலை வேலைகள் மேற் பார்வை அதிகாரி செ.தவராசா, தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியற் பிரிவு உறுப் பினர் அ .அமுதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-3)

* * *

(நெல்லியடி)

யா/கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அதிபர் எஸ்.சிறிராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில், பிரதமவிருந்தினராக தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (உ-44)

* * *

(கோப்பாய்)

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் க.இ.இராசசேகரம் தலைமையில் கல்லூரிமைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக பாராளுமன்றஉறுப்பினர்மாவை.சேனாதிராஜாவும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் ஆகியோர்கலந்து கொள்ளவுள்ளனர்.(உ-79)

* * *

(யாழ்ப்பாணம்)

உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையின் புதிய நுழைவாயில் திறப்பு விழாவும், இல்ல மெய்வல்லுநர் போட்டியும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் செல்வி பி.வடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி ச.நாகராசா, கௌரவ விருந்தினராக வலிகாமம் வலய ஆங்கில ஆசிரிய ஆலோசகர் சு.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(உ-3)

## கூட்டம்

(ஊர்காவற்றுறை)

நாரந்தனை தெற்கு அண்ணா சனசமூக நிலையப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மேற்படி நிலையக் கட்டிடத்தில் நடைபெறவுள்ளது.

புதிய நிர்வாக சபைத்தெரிவும் இடம்பெறவுள்ளது. (உ-75)

# முதலீட்டாளர்களுக்கு புதிய வரிச் சலுகை

(கொழும்பு)

உள்நாட்டு ,வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு புதிய வரிச்சலுகைகளை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்று முன்தினம் காலை என். ரி. வி யன் குட்மோனிங் ஶ்ரீலங்கா நியூஸ்லைனுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்யும் அரசாங்கத்தின் குறிக்கோளை நிறைவேற்றவே இச் சலுகை அளிக்கப்படவுள்ளது. வரித் தொகுப்பு காலமும் நீடிக்கப்படவுள்ளது.

முதலீட்டுச் சபை சட்டம் மற்றும் தேசிய வருமானச் சட்டம் ஆகியவற்றின் சரத்துக்களுக்கு ஏற்ப இவ்வரிச் சலுகை வழங்கப்படவுள்ளது என்று பீரிஸ் மேலுமதெரிவித்துள்ளா. (உ-8)

## மாகாணக்கல்விப் பணிப்பாளர்கள் மூவர் நியமிக்கப்படுவர்

(கொழும்பு)

மாகாணக்கல்விப் பணிப்பாளர்கள் மூவரை நியமிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கு-கிழக்கு, வடமேல் மற்றும் மேல் மாகாணங்களில் பதில் மாகாணக்கல்விப் பணிப்பாளர்களே தற்போது கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களுக்குப் பதிலாக நிரந்தர மாகாணக் கல்விப் பணிப்பாளர்களை நியமிக்க கல்வி அமைச்சு உத்தேசித்துள்ளது.

இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் முதலாம் வகுப்பைச்சேர்ந்த உத்தியோகத்தர்களில இருந்து இப் பதவிக்கு தகுதியானவர்கள்தெரிவு செய்யப் படவுள்ளனர். (உ-8)

## கண்காணிப்புக் குழுவின் அனுமதி பெறாது கடற்பயிற்சியில் புலிகள் ஈடுபடுவது புரிந்துணர்வு ஒப்பந்த மீறலாகும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினர் கண்காணிப்புக் குழுவின் அனுமதியுடனேயே கடற்பயிற்சிகளில் ஈடுபட முடியும் என குழுவின் பிரதித் தலைவர் ஹெங்குதுப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

இதற்கு மாறாக கடற்பயிற்சிகளில் புலிகள் ஈடுபடுவார்களேயானால் அது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலாகும். இதனை புலிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இலங்கைத் தீவைச் சூழவுள்ள கடற்பரப்பில் பாதுகாப்பில் ஈடுபடுவதற்கு கடற்படையினரைத் தவிர வேறு எவருக்கும் அனுமதி இல்லை.

புலிகள் கடற்பயிற்சிகளில் ஈடுபட விரும்பினால் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து கடற்படைக்கு அறிவிக்கப்படும். பரஸ்பர தொடர்புகளுடன் மேற்கொண்டால் பிரச்சினைகள் எழுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார். (உ-3)

## சிறுவர் கல்வி மேம்பாட்டுக்கு கனடா கிறிஸ்தவ ஒன்றியம் உதவும்

(ஈச்சமோட்டை)

யாழ். மாவட்ட சிறுவர்களின் கல்வி மேம்பாடு குறித்து ஆராய்ந்து உதவிகளை வழங்க கனடா கிறிஸ்தவ ஒன்றியம் முன்வந்துள்ளது.

கடந்த புதனன்று யாழ். வருகை தந்த கனடா கிறிஸ்தவ ஒன்றிய இலங்கைக் கான வதிவிடப்பிரதிநிதி கமிஸ் மெண்டிஸ் இது சம்பந்தமாக கியூடெக நிறுவனத்துடனும், புனித பத்திரிசியார் கல்லூரி நிர்வாகத்துடனும் கலந்துரையாடியுள்ளார்.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கும், அனாதைப் பிள்ளைகள் மற்றும் போரின் தாக்கங்களுக்கு உள்ளானவர்களுக்கும் கல்விக்கான நிதியுதவியை வழங்கி அவர்களை மேம்படுத்தும் திட்டம் ஒன்றை விரைவில் நடை முறைப்படுத்த வுள்ளதாக அவர் உறுதியளித்துள்ளார். (உ-59)

## மணிவிழா காணும் நீர்வைமணி



இறையவனின் கோயில் பல வளரும் - நீர்வை
எழிலுறு செல்லக்கதிர்காமத்துச் செல்வன்
குறையிலதாய் நின்றிலங்க வழி சமைக்கும்
குற்றமிலா நெஞ்சுடைய குருக்களாகி
கறைபடியா வாழ்வில றுபதாம் அகவை
காண்கின்ற நீர்வை மணி யெனப்பேர் பூண்ட
நறை பழுத்த தமிழன் தியாகராசச்சீரோன்
நன்றிவண் வாழ்ந்துயர வாழ்த்துவோமே!

கல்விகலை ஞானமவை பயின்ற வல்லோன்
கசடற மென்மேலுமிவன் கற்கும் சீரோன்
அல்லலுறு பவர்க்காணின் அகம் மகிழ்ந்தே
ஆயபல உதவிகளும் அணித்துயர்வோன்
தொல்லுலகில் எல்லவரை மதித்து வாழும்
தோமில் குணசீலனிவன் தொடரும் வாழ்வில்
சொல்லுசுக போகங்கள் அனைத்தும் பெற்றே
சோபித்துப் பல்லாண்டு வாழ்க வாழ்க!

வாழ்த்துவோர்
நீர்வேலி வடக்கு (C/5781) பி. நாகேந்திரம் குடும்பம்


## இந்திய ஜோதிடர் யாழ்- விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள் பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்திய பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத் தடையா? தொழிற் பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எவ்வித பிரச்சினைகளுக்கும் தக்கபரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

**மணிசாமி P.T.**

பாண்டீஸ்வரி அம்பாள் அம்மா
யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி,
இல. 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்)
பார்வையிடும் நேரம் : காலை 9 மணி முதல் மாலை 4.00 மணிவரை.

[C/5522]

## இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப்புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ளார். பரம்பரை ஜோதிடர்



புகழ் பெற்ற

**S.N.குமாரசாமி**

கைரேகை,ஜாதகம்,எண்கணிதம்மற்றும் திருமணத்தடை, தொழில் முன்னேற்றம் இன்மை மற்றும் எந்தப்பிரச்சினை களுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)

**திருS.Nகுமாரசாமி**
ஸ்ரான்லி லொட்ஜ்
இல:711,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(C/5721)


## மணிவிழா வாழ்த்து



### சிவஸ்ரீ. குமாரசாமிஐயர் தியாகராசக்குருக்கள்

(நீர்வேலி செல்லக்கதிர்காம கோயில் - பிரதமகுரு,
நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை - தலைவர்)

23.02.2003 இன்று ஞாயிற்றுக்கிழமை அகவை அறுபதைப் பூர்த்தி செய்யும் மணிவிழா நாயகனைச் சீருஞ் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்ந்து சமயப்பணி தொடர வாழ்த்துகிறோம்.

அன்புடன் வாழ்த்துவோர்
ஸ்ரீகணேசா முன்பள்ளி மாணவர்கள்,
ஆசிரியர்கள், பெற்றோர்கள்,
நிர்வாகத்தினர்.

(C/5799)

## சேவைக்காலப் பயிற்சி

(சுதுமலை)

வடக்கு- கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தால் யாழ். மாவட்டத்தில் உள்ள திணைக்களங்கள், அமைச்சு அலுவலகங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற ங்களில் கடமைபுரியும் எழுதுநகர்களிற்கும் அதனுடன் இணைந சேவைகளைச சேர்ந்த சகல அலுவலர்களிற்கும் விசேட சேவைகாலப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பாக திருகோணமலையில் உள்ள முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிச் செயலாளர் எஸ். கிருஸ்ணானந்தன் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.(உ-252)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யா/ குரும்பசிட்டி,பொன். பரமானந்தா வித்தி, யா/ ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை , யா/ சிறுவிளான் கனகசபை வித்தி ஆகியவற்றில் வெற்றிடமாக உள்ள அதிபர் பதவிக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை மார்ச் 5ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

## இடமாற்றம்

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் திட்டமிடல் உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருமதி ச. மோகனேஸ்வரன் கடந்த வெள்ளிக்கிழமை முதல் யாழ். மாவட்டச் செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (உ-36)

## அணிசேரா மாநாட்டில் ஜனாதிபதி

(கொழும்பு)

மலேசியத் தலைநகரில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்வமைப்பின் அரச தலைவர்கள் கலந்து கொள்ளும் 13வது உச்சி மாநாடு கோலாலம்பூரில் நேன்று ஆரம்பமாகியுள்ளது. இம்மாநாடு தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாணடோ, அமைச்சின் செயலாளர் நிஹால் ஹொட்டாக்கோ, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸகாலி யத்த, சி.வி. ரட்ணாயக்கா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## இறுதிப் பரீட்சை

(கல்வியங்காடு)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தமது மாணவர் பதிவுகளை புதிப்பித்துக் கொள்வதற்காக எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன் நிலையத்திற்கு சமுகம் கொடுக்குமாறு யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் ச.ஆ. ஞானேநதிரன் அறிவித்துள்ளார். (உ-54)

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 28ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் மார்ச் மாதம் 17,18ஆம் திகதிகளில் முறையே தேர், தீர்த்த உற்சவங்கள் இடம்பெறவுள்ளன. (உ)

## ஆண்டு நிறைவு பெருவிழா

(கொழும்பு)

சபரிமலை ஸ்ரீ சஸ்தாபீடத்தின் 20வது ஆண்டு நிறைவுப் பெருவிழா இன்று பி.ப. 3.00 மணிக்கு வெள்ளவத்தை ஸ்ரீ மயூரபதி அம்பாள் தேவஸ தானத்தில் சர்வதேச இந்துமத குருபீடாதி பதி கலாநிதி ஸ்ரீ.ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-3)

## வாழ்த்துகிறோம்



இன்றைய நன்னாளில் மணிவிழாக்காணும்பிரம்மஸ்ரீ தியாகராஜக் குருக்கள்(மணிஐயா)அவர்களசகலசௌபாக்கியங்களும் பெற்று சிறப்புடன்மிளிர வாழ்த்திநிற்கின்றோம்.

வெற்றிவேலாயுதம்
நீர்வேலி, சுதர்சினி.
(C/5782)

## இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசை விழா 2003

இடம் : மன்றக் கலாமண்டபம்
காலம் : 14.02.2003 - 23.02.2003 வரை

நிகழ்ச்சி நிரல

**இன்று (23.02.2003) ஞாயிற்றுக்கிழமை 10ஆம் நாள்**

**E.S.P. பேரம்பலம் நிறுவனத்தினர் ஆதரவில்**

காலை 9.00 மணி முதல் 10.00மணி வரை
**மங்கள இசை**
நாதஸ்வரம்: எம். குகதாஸ், ஏ. ஜெயச்சந்திரன்
தவில்: ஏ. ஜெயா, ஆர். ரஞ்சன்

காலை 10.00 மணி முதல் 10.20 மணி வரை
பாட்டு : சுபஹரி வெங்கடேஸசர்மா, ஸ்ரீகௌரி வெங்கடேஸசர்மா
வயலின் : சந்தானலக்சுமி அப்புத்துரை மிருதங்கம் : கானகோகிலம் ஜெயம்

காலை 10.20 மணி முதல் 10.40 மணி வரை
**குழுப்பாடல்**
யி. பத்மராணி, கே. நர்மதா, என். லோஜினி
ஜெ. மதிவதனி, எம். தர்மிளா, ரி. இந்துமதி
வயலின் : எம். கிருஷ்ணவேணி மிருதங்கம் வி. றமணன்

காலை 10.40 மணி முதல் 11.00 மணி வரை
புல்லாங்குழல் : எஸ். உருத்திரசேகரம் வயலின் : எம். ரதீஸ்குமார்
மிருதங்கம் வி. றமணன்

காலை 11.00 மணி முதல் 11.45 மணி வரை
பாட்டு : நந்தினி விஜயகுமாரன் வயலின் : எம். ரதீஸ்குமார்
மிருதங்கம் : சதாவேல்மாறன் முகர்சிங் : எம். கஜன்

காலை 11.45 மணி முதல் 12.30 மணி வரை
பாட்டு : பஞ்சமூர்த்தி குமரேஸ் வயலின் : ஏ. ஜெயராமன்
மிருதங்கம் : எஸ். துரைராசா கடம் : ஏ. செல்வரத்தினம்
முகர்சிங் : கே. நந்தகுமார்

காலை 12.30 மணி முதல் 12.45 மணி வரை
**அருளுரை : ஸ்ரீ. ராஜேஸ்சுவாமிகள்**

மாலை 3.30 மணி முதல் 3.50 மணி வரை
**வீணை இசை**
ஹரிகரன் காஞ்சனா, கனகசபாபதி அனுஷ்யா,
சந்திரதாஸ் கீதாஞ்சலி, புஷ்பராஜா சுமதி
மிருதங்கம் : பீ. சியாமகிருஷ்ணா

**2003 ஆம் ஆண்டு மன்றத்தால் நடாத்தப்பட்ட இசைப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்கள் நிகழ்ச்சிகள்**

மாலை 3.50 மணி முதல் 4.00 மணி வரை
**கீழ்ப்பிரிவு**
செல்வி. மதுராங்கி சுந்தரேஸ்வரன்

மாலை 4.00 மணி முதல் 4.15 மணி வரை
மத்திய பிரிவு
செல்வி. சிவசக்தி அருணகிரிநாதன் வயலின் : சந்தானலக்சுமி அப்புத்துரை
மிருதங்கம் : கானகோகிலம் ஜெயம்

மாலை 4.15 மணி முதல் 4.40 மணி வரை
மேற்பிரிவு
செல்வன் நவரத்தினம் பரந்தாமன்
வயலின் : ஏ. ஜெயராமன் மிருதங்கம் : எஸ். துரைராசா

**மங்கள விளக்கேற்றல்**
E.S.P நாகரட்ணம (உரிமையாளர் E.S.P நிறுவனம்)

மாலை 4.40 மணி முதல் 5.25 மணி வரை
**வீணை இசை**
வீணை : ஜனனி நடராஜமூர்த்தி மிருதங்கம் : வி. றமணன

மாலை 5.25 மணி முதல் 6.10 மணி வரை
பாட்டு : சாரதா பரஞ்சோதி வயலின் : எஸ். கோபிதாஸ்
மிருதங்கம் : எம். சிதம்பரநாதன் முகர்சிங் : வி. றமணன்
கெஞ்சிரா : எஸ். சண்முகசுந்தரம்

மாலை 6.10 மணி முதல் 7.30 மணி வரை
**நாதஸ்வரக் கச்சேரி**
நாதஸ்வரம்: என்.கே. பத்மநாதன், ஆர். பார்த்தீபன்
தவில்: கே. கனேசமூர்த்தி, எஸ். நந்தகுமார்

இரவு 7.30 மணி முதல் 8.30 மணி வரை
**சாவகச்சேரி திலக நர்தனாலய மாணவிகளின் பரதநாட்டியம்**
தயாரித்து வழங்குபவர் : யசோதா விவேகானந்தன்

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

சட்டநாதர் வீதி நல்லூர். (C/5761) மன்றத்தினர்

வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள் யானையால் யானையாத் தற்று. — குறள்

# வலம்புரி

## கண்காணிப்புக் குழுத் தலைவரின் கருத்து

இலங்கை அரசின் பொலிஸ் படையும் விடுதலைப்புலிகளின தமிழீழக் காவல்துறையும் இணைத்து நன்கு பயிற்றப்பட்ட படையொனறை உருவாக்க வேண்டும் என சர்வதேச கண்காணிப்புக்குழுத் தலைவர் பொன்பியுறு ஹெவ்டே தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற புரிந்துணாவு ஒப்பந்தத்தின் ஓராண்டு நிறைவையொட்டி நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே கண்காணிப்புக் குழுத தலைவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நோர்வே நாட்டைச்சேர்ந்த கண்காணிப்புக் குழுத்தலைவரின பார்வையில் ஓர் சமத்துவமான நோக்கில், அவரது கருத்து நியாயமானதாக இருக்கலாம்.

ஆனால், யதார்த்த நிலை வேறு. இலங்கையில் கடந்த 20 வருடமாக நடைபெற்ற யுத்தத்திற்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர்களில் இலங்கைபபொலிஸாரே முக்கிய இடத்தைப்பெறுவர்.

யாழ. குடாநாட்டில் கடமையாற்றிய சிங்களப்பொலிஸாா தமிழ் மக்களை மக்களாகக் கருதவில்லை மாறாக அவர்கள் மாக்களாகவே கருதினர். 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இடம்பெற்ற படுகொலைக்கு காரணமாக இருந்தவர் ஒரு சிங்களப் பொலிஸ் அதிகாரி என்பது மறுக்க முடியாத உண்மை.

அதேபோன்று இரண்டாவது ஈழப் போர் தொடங்குவதற்கும மட்டக்களப்பில்கடமையாற்றிய சிங்களப் பொலிஸாரே காரணமாக இருந்தனர்.

முஸ்லிம் இனத்தவாகளின முறைப்பாடொன்றை பதிவு செய்வதற்கு மறுப்புத் தெரிவித்ததன் காரணமாக 1990ம் ஆண்டு ஜூன் மாதம் மீண்டும போர் தொடங்கியது.

இவை மட்டுமன்றி தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களப் பொலிஸார் கடமையாற்றியமையினால அவர்களிடம் நிலவிய மொழிபபிரச்சினை மற்றும் இனவாதம் என்பன தமிழ் மக்களை குறிப்பாகத் தமிழ் இளைஞர்களை வெகுவாகப் பாதித்தது. அநதபபாதிப்பின் விரக்தி நிலையே போராட்டத்தின் அடித்தளமாகவுள்ளது. இந்நிலையில் இலங்கைப்பொலிஸ் படையும், தமிழீழ காவல் துறையும் இணைந்து புதிய படையொன்றை அமைப்பது பொருத்தப்பாடுடையதாக இருக்கமுடியாது.

தமிழர்கள் உரிமையோடு வாழ வேண்டுமாக இருந்தால் தமிழர் தாயகத்தில் தமிழீழக் காவல் துறையே கடமையில் ஈடுபட வேண்டும். மீண்டும் சிங்களப் பொலிஸார் தமிழ் மண்ணில் கடமை புரிந்தால, முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சியும், எட்டப்படும் தீர்வுத் திட்டமும் பயனற்றதாகிவிடும்.

எனவே கண்காணிப்புக் குழுத்தலைவர் யதார்த்த நிலையை உணர்ந்து கொண்டு தமிழர் தாயகத்தில் தமிழர்களின் காவல்துறை இயங்குவதை வலியுறுத்த வேண்டும்.

# இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் வட பகுதியில் கொட்டடியிலும் — மடுவிலும் நிகழ்த்தும் நன்றி வழிபாடுகள்

இலங்கை கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் இலங்கை ஆயர்கள் அனைவரும் ஒன்றாக இலங்கையின் வட பகுதிக்கு வருகை தருவது அடிக்கடி நடைபெறும் ஒரு விடயம் அல்ல. நீண்ட காலமாக நடந்த போரினால் வட பகுதி மக்களை இவர்கள் வந்து பார்க்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்க



வில்லை. போராட்ட காலத்தில் தமிழ் மக்களைப் பார்க்க இவர்கள் வரவில்லை என்ற ஒரு குறையும் கூறப்பட்டு வந்ததை நாம் மறுப்பதற்கில்லை. இருப்பினும் இப்போதைய நிலைமைகள் சற்று அமைதியானவுடன் அவர்கள் வட பகுதிக்கு வர விருப்பமுடையவர் களாய் இருப்பது வரவேற்கத்தக்க ஒரு நல்ல அறிகுறியாகும்.

இலங்கையின் அனைத்து ஆயர்களும் வடபகுதிக்கு வருகின்ற ஒரு நிகழ்வு மாசி மாதம் 24ஆம் 27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இலங்கையின் 11 மறைமாவட்டங்களில் அனுராதபுரம், இரத்தினபுரி ஆகிய இரு மறைமாவட்டங்களும் ஆயர்கள் இன்றியே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இரத்தினபுரியின் ஆயராக கரல்ட் அன்ரனி பெரேரா அடிகளார் அண்மையில் திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளார். மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை வெளிநாட்டுப் பயணம் ஒன்றில் ஈடுபட்டிருப்பதால் வட பகுதிக்கான இந்த நிகழ்வில் அவர் கலந்துகொள்ள வில்லை.

கொழும்பு மறைமாவட்டத்தின் துணை ஆயர் உட்பட 8 ஆயர்கள 24ஆம் திகதி கிளிநொச்சியூடாக யாழ்நகர் வருகை தருகிறார்கள். அவர்களின் பெயர்களை கட்டுரையின் முழுமை கருதி கீழே தருகிறேன்.

1. கொழும்பு மறைமாவட்ட பேராயர் மேதகு ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை, 2. துணை ஆயர் மேதகு மேரியஸ் பீரிஸ் ஆண்டகை, 3. கண்டி மாவட்ட ஆயர் மேதகு வியான்னி பெர்னாண்டோ ஆண்டகை, 4. பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு வின்ஸ்ரன் பெர்னாண்டோ ஆண்டகை, 5. காலி மறைமாவட்ட ஆயர் மேதகு எல்மோ பெரேரா ஆண்டகை, 6. திருமலை மட்டுநகர் மறைமாவட்ட ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, 7. சிலாப மறை மாவட்ட ஆயர் மேதகு பிராங் மார்க்கஸ் ஆண்டகை, 8. குருநாகல் மறைமாவட்ட ஆயர் மேதகு ரேமண்ட் பீரிஸ் ஆண்டகை. இவர்கள் 27ஆம் திகதி திரும்பவும் இங்கிருந்து புறப்பட்டு மருதமடு அன்னையின் பதியில் மன்னார் ஆயரோடு இணைந்து நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்த பின்னர் கொழும்பு திரும்பவுள்ளனர்.

இவர்களின் வட பகுதிக்கான இந்த வருகைக்கு ஒரு முக்கிய நோக்கம் உள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஓர் ஆண்டு நிறைவுறுகிற வேளையில் இங்குள்ள நிலைமைகளைப் பார்க்கவும் இன்னும சிறப்பாக இந்த நிலைக்கு வழிவகுத்த மருதமடு அன்னைக்கும் முத்திப்பேறு பெற்ற யோசவ்வாஸ் அடிகளுக்கும் நன்றி தெரிவித்து வழிபாடுகளை நடத்துவதுமே அதுவாகும்.

முதலில் இலங்கையில் யாழ். மறைமாவட்டத்தில் உள்ள நாவாந்துறை-கொட்டடியில் அப்போஸ்தலரான யோசவ்வாஸ் யாத்திரைஸ்தலத்தை கொழும்பு பேராயர் மேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைப்பார். கண்டி ஆயர் மேதகு வியான்னி பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் திருநாள் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இலங்கை மண்ணில் சமாதானம் நிலவ அருள் பாலித்த யோசவ்வாஸ் முனீந்திரனுக்கு நன்றி தெரிவித்து நிகழ்த்தப்படும் இத்திருப்பலியில் அனைத்து ஆயர்களும் கலந்து கொள்வார்கள். இப்பதியின் பரிபாலகர் செ.ஜோசணிஸ்ரன் அடிகளார் அனைத்து ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளதோடு, மக்கள் அனைவரும் திரண்டு வந்து இந்நிகழ்வில் கலந்து கொள்ளும்படி அழைப்புவிடுத்துள்ளார். இலங்கையின் அப்போஸ்தலராக விளங்கும் யோசவ்வாஸ் அடிகளின் புனிதர் பட்ட நிகழ்வுக்கான ஆயத்தங்களும் ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படுகின்ற வேளையில், இலங்கை மண்ணில் சமாதானம் நிலவ அருள் பாலித்தது யோசவ்வாஸ் அடிகளின் அருளாகவே கருதப்படுகிறது.

அடுத்து, இந்நிகழ்வுகளை நிறைவு செய்துகொண்டு ஆயர்கள் அனைவரும் மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள மருதமடு அன்னையின்

### பரமபிதா காட்டிய பாதை

பாதத்தில் கூடி, இலங்கை மண்ணில் சமாதானம் நிலவ அருள் பாலித்தமைக்காக நன்றி தெரிவித்து கூட்டுத் திருப்பலி ஒன்றினை ஒப்புக்கொடுப்பார்கள். இலங்கையில் சமாதானம் நிலவ இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் அனைவரும் மருதமடு அன்னையிடம் சிறப்பாக வேண்டிக்கொண்டதும் மருதமடு அன்னையின் திருச்சொரூபத்தையும் யாத்திரையாக தென்னிலங்கைக்கு எடுத்துச் சென்றதும் இலங்கையில் நடைபெற்ற உத்தியோகபூர்வ தேசிய நிகழ்வுகளாக இருக்கின்றன. இந்நிகழ்வின் பின்னரே பலரும் தெளிவாக குறிப்பிட்டதைப் போன்று, இலங்கை மண்ணில் சமாதானம் தோன்றுவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. எனவே ஆயர்களின் மடுப்பதிக்கான வருகையும் அங்கு நிகழ்த்தப்படும் வழிபாடுகளும் சிறப்பு முக்கியத்துவம் பெறுகின்றன.

### அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதோடு, சமாதானம் வந்துவிட்டது என்றோ நிலைமைகள் எல்லாம் வழமைக்குத் திரும்பிவிட்டன என்றோ கூறுவதற்கில்லை. ஓரளவு மன அமைதியையும் நிம்மதியையும் மக்கள் பெற்றுவிட்டாலும் இன்னும் முழுமையான அடிப்படைச் சுதந்திரமும் இயல்பு வாழ்வும் அன்றாட நிகழ்வுகளும் நடைபெறவில்லை. கிடைக்காத ஒன்றிற்காக ஏங்கிக்கொண்டிருப்பதைக் காட்டிலும் கிடைத்த ஒன்றை முழுமையாகப் பயன்படுத்துவோம் என்ற நோக்கில் கிடைத்த சந்தர்ப்பத்தை சம்பந்தப்பட்ட அனைவரும் பெற்று அதன் முழுமையை அனுபவிக்க முயற்சித்துக்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

இன்னும் நிலைமைகளை முன்னேற்றவும் அமைதியையும் சமாதானத்தையும் ஒரு குறுகிய கால நிலையாக விட்டுவிடாமல், ஒரு நிரந்தர நிலையாக மாற்றி அமைக்கவும் தமிழ் மக்கள் அனைவரும் இறைவனை பிரார்த்திக்க வேண்டும். குறிப்பாக இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் உத்தியோகபூர்வ நிகழ்வாக யோசவ்வாஸ் முனிவருக்கும் மருதமடு அன்னைக்கும் நன்றி தெரிவித்து நிகழ்த்தும் இவ் வழிபாட்டு நிகழ்வுகளின் காலத்தில் இறையருள் தமிழ் மக்கள மேல் நிறைவாகப் பொழியப்பட வேண்டிக்கொள்ளுவோம்.

மருதமடு அன்னை இரு இன மக்களையும் கத்தோலிக்கர் என்கின்ற பெயரில் இணைக்கின்ற ஒரு அன்னையாக திகழ்ந்திருக்கின்றாள். இலங்கையின் அப்போஸ்தலர் என்கின்ற வகையில் யோசவ்வாஸ் முனீந்திரன் இலங்கை மக்கள் அனைவரையும் அன்போடு பாதுகாத்து, பராமரித்து, புரிந்துபேசும் வரத்தினைப பெற்றிருக்கிறார். இவர்களின் அருளால் எம் மண்ணில் தோன்றியுள்ள இச்சிறிய அமைதியும், சமாதானமும் நின்று நிலைக்கவும் நீதியோடு கூடிய நிரந்தர தீர்வினைக் கொண்டுவரவும் இறைவனை வேண்டுவோம்.

# கிளி. மாவட்டத்தில் எக்கோத் திட்டம்

(கிளிநொச்சி)

ஸ்பானிய செஞ்சிலுவைச் சங்கமும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்ட கிளையும் இணைந்து ஐரோப்பிய ஒன்றிய மனிதாபிமானத்திற்கான அமைப்பின் எக்கோத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேறிய மக்களுக்கு உதவிப் பொருட்களை வழங்கியுள்ளன.

திருநகர், உருத்திரபுரம், சிவநகர், ஆனந்தபுரம், பெரிய பரந்தன், பரந்தன், பூநகரி முதலான இடங்களில் மீள் குடியேறியோருக்கே இவ் உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

எக்கோ திட்டத்தின் கீழ் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையின் அனுசரணையுடன் மலசல கூடங்கள் அமைத்தல், யுத்தத்தால் சேதமடைந்த கிணறுகளை புனரமைத்தல் ஆகியனவும் முன்னெடுக்கப்படவுள்ளன. (உ)

# 1000 — 500 ரூபா புதிய நோட்டுக்கள் அறிமுகம்

(கொழும்பு)

ஆயிரம் ரூபா, ஐநூறு ரூபா புதிய நோட்டுக்களை மத்திய வங்கி அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்நோட்டுக்களில் நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி, மத்திய வங்கி ஆளுநர் ஏ.எஸ்.ஜெயவர்த்தனா ஆகியோரின் கையெழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

ஆயிரம் ரூபா பண நோட்டு ஜி எனத் தொடங்கும் முன் எழுத்தினையும், 10600000 எண் தொடரையும், 500 ரூபா பண நோட்டு எச் எனத் தொடங்கும் எழுத்தையும் 7100000 எண் தொடரையும் கொண்டிருக்கும்.

இப்புதிய நோட்டுக்களின் பாதுகாப்பு இழை அகலமானதாகவும் இழைகளுக்குள்ளே பல்லினத் தன்மையும் காணப்படுகிறது. (உ-3)

# வானத்திலிருந்து வீழ்ந்த ஒளி பொருந்திய மர்மப்பொருள்

(கொழும்பு)

வானிலிருந்து 8 அங்குல சுற்றளவிலான மர்மப் பொருள் ஒன்று கண்டி முறுத்தலாவை என்னும் இடத்தில் கடந்த புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் விழுந்துள்ளது.

சாம்பல் நிறத்தில் பந்து போல் காணப்படும் இப்பொருள் பிரகாசமாக காணப்படுவதுடன் இப்பொருள் மின்குமிழ் போன்ற வெளிச்சத்துடன் விழுந்ததாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இனம் காணப்படாத இம் மர்மப் பொருள் ஆராய்ச்சி செய்வதற்காக பேராதனை புவியியல் ஆராய்ச்சி பிரிவிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை, நீர் கொழும்புப் பகுதியிலும் அண்மையில் இவ்வாறான பொருள் ஒன்று வீழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

### திசரி தியானம்

## பெருஞ்சாதனை

தியானம் யோகத்தின் ஏழாவது நிலைதான். செய்ய வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்யாமல், ஏழாம் படியில் நிலைபெற விரும்புகிறீர்கள். இது இயலுமா? முதலில் நன்னெறி சார்ந்த முழு நிறைவைப் பெறுங்கள். பல பிறவிகளுக்கு இது ஒன்றே போதுமானது.

கீதையைப் படியுங்கள் தீமைகளை ஒழித்து நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளலாம். இறைவன் அருளிச் செய்த ஒழுக்க நெறியைக் கடைப்பிடியுங்கள். இதைச் செய்தாலே மனிதப் பிறவிக்குரிய பெருஞ்சாதனையைச் செய்தவர்கள் ஆவீர்கள்.

சுவாமி சிவானந்தர்

# ஜெய்ப்பூர் நிறுவன — கட்டட புனரமைப்புக் குறித்து திட்டப்பணிப்பாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

பழைய பூங்கா வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஜெய்ப்பூர் நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டடங்கள் ஜெய்ப்பூர் நிறுவன முகாமைத்துவ குழுவினராலேயே நிதியுதவி பெற்று புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஜெய்ப்பூர் செயற்கை அவயவ நிறுவனத்தின் யாழ். திட்டப் பணிப்பாளர் திருமதி தி.யோகநாதன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும், தற்காலிகமாக இணுவிலில் இயங்கிவரும் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்டத்திற்கு அனுசரணையாகவே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்கை அவயவம் பொருத்தும் தொழில் நுட்பமானது செயற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் சுண்டுக்குழியில் உள்ள ஜெய்ப்பூர் அவயவ உற்பத்தித் தளக் கட்டடம் தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது என்று வெளியான செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

British BUSINESS SCHOOL
Where Students Come First

# முதற்தடவையாக யாழ் குடாநாட்டில்!

பாலர் முதல் பட்டதாரிகள் வரை யாவர்க்கும், தரமான ஆங்கில மொழி பாடநெறிகள்!!
மிகக் குறுகிய காலத்தில் சரியான முறையில், சரளமாக ஆங்கிலம் பேசுவீர்கள் என உத்தரவாதம் வழங்குகிறது.

தெற்கில் பிரசித்திபெற்ற

# BRITISH BUSINESS SCHOOL

British BUSINESS SCHOOL
Where Students Come First

வளர்ந்தோருக்கு:

Certificate in English

Diploma in English

Advanced Diploma in English

IELTS
INTERNATIONAL ENGLISH LANGUAGE TESTING SYSTEM

TOEFL
TEST OF ENGLISH AS A FOREIGN LANGUAGE

Special Oral English Communication Course

Special English Course for Academics and Professionals @ Advanced Diploma Level



@ KACHCHERI CAMPUS
International School For Children
AGE: 2+ to 5+
Montessori & Early Learning Centre in the English Medium

GRAND OPENING ON

Saturday 1st March 2003 @ 10.00 a.m.




Chief Guest :
Mr.Michael R.Couture
Former Trade Advisor to the Canadian High Commission

சிறுவர்களுக்கு
ஓர் வரப்பிரசாதம்!
இது tuition கல்வி அல்ல,
இது ஒரு முழுமையான, சிறந்த
பெறுபேற்றிற்கு உத்தரவாதம்
வழங்கும் தரமான ஆங்கிலப் பாடநெறிகள்,
உங்கள் பிள்ளைகள்
இரு வருடங்களில் இவ்வெல்லாப்
பாடநெறிகளையும்
பூர்த்தி செய்யலாம்.

மற்றும்

English Elocution Classes for Children

English Courses for Children
- Level 1 Foundation
- Level 2 Lower Intermediate
- Level 3 Intermediate
- Level 4 Upper Intermediate
- Level 5 Certificate in English

- நவீன வசதிகள் கொண்ட கற்றல் – கற்பித்தல் சூழல்.
- உயர் தகைமை கொண்ட ஆசிரியர் குழு.
- தனிப்பட்ட கவனம்.
- அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.






Business, Finance, Computing Divisions will commence soon
LONDON O/L LONDON A/L
ACCOUNTANCY & BANKING COURSES
CIMA, AIB, IAB,ACCA, CAT
CHARTERED,CMA, AAT

# BRITISH BUSINESS SCHOOL

JAFFNA CITY CAMPUS: 140, Temple Road, Jaffna
COLOMBO CAMPUS: #4, Castle Lane, Colombo-04. Tel: 01-552197 Fax: 504652 E-Mail: bbc04@isplanka.lk


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.